# செயலாற்றுகை அறிக்கை

# 2015

# உள்ளடக்கம்

**தலைப்பு** **பக்க எண்**


**1. அறிமுகம்** 1-2

**1.1** தூரநோக்கு ........................................................ 1

**1.2** செயற்பணி ........................................................ 1

**1.3** அலுவல்கள்........................................................ 1

**2. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு** 3-16

**2.1** கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்.............. 3

**2.1.1** இந்திய விஜயம்........................................................ 3

**2.1.2** ஜப்பான் விஜயம்........................................................ 8

**2.1.3** சிங்கப்பூர் விஜயம் ........................................................ 12

**2.2** இராஜ தந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்தல் 14

**3. கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள்** 17-38

**3.1** பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழு ........................ 17

**3.2** பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அதிகாரிகள் குழு ........................ 17

3.3 கொள்கைகள் உருவாக்கல் அலுவலகத்தை தாபித்தல் ........................ 28

3.4 கொள்கை உருவாக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுக்கள்........................ 30

**3.4.1** முதலீடுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் வரிகள் பற்றிய ஆய்வுக் குழு........................ 30

**3.4.2** தேசிய ஓய்வூதிய அலுவலகம் மற்றும் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவை அமைத்தல் பற்றிய ஆய்வுக் குழு........................ 31

**3.4.3** நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு........................ 32

**3.4.4** விளையாட்டுத் துறை சட்டம் பற்றிய ஆய்வுக் குழு ........................ 33

3.4.5 பாராளுமன்ற நிர்வாகம் பற்றிய ஆய்வுக் குழு........................ 35

**3.4.6** அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்கள் கருத்தறியும் குழு.......... 36

**3.4.7** ஐரோப்பிய சங்கத்தின் மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்குவதற்கான செயற்பாட்டுக் குழு.......... 36

**3.4.8** அரச நிதி முகாமைத்துவத்துடன் தொடர்பான சட்டத்தை வரையும் குழு.......... 37

**3.4.9** கொழும்பு கலாசார மத்திய நிலையத்தை தாபித்தல் தொடர்பான சிபாரிசைப் பெற்றுக் கொடுக்கும் குழு.......... 38

**4. தேசிய நல்லிணக்கம், சமூக நலனோம்புகைகள் மற்றும் மத அலுவல்கள்** 39-50

**4.1** தேசிய நல்லிணக்கம்.......... 39

**4.1.1** பிரதம அமைச்சரின் வட மாகாண விஜயம்.......... 39

**4.2** சமூக நலனோம்புகைகள் மற்றும் மத அலுவல்கள்.......... 43

**5. பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்** 51-53

**5.1** பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் ...... 51

**5.2** பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்.......... 53

**6. பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஏனைய அலுவல்கள்** 54-63

**6.1** அமைச்சரவை நிருபம், அமைச்சரவைக் குறிப்புக்கள், சட்ட மூலங்களைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல். 54

6.2 வெளிநாட்டு விடுமுறை.......... 55

**7. மனித வள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் நிதிசார் முன்னேற்றம்** 58

**7.1** மனித வள அபிவிருத்தி.......... 58

7.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உற்பத்தித் திறன் விருத்திக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்.......... 60

7.3 நிதிசார் முன்னேற்றம்.......... 63

# 1.அறிமுகம்

## 1.1 தூரநோக்கு

“சௌபாக்கியம்மிக்க இலங்கை”

## 1.2 செயற் பணி

இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு மற்றும் அவர்களின்வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றிற்காக வழிகாட்டல்.

## 1.3 அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகம், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் பிரதம அமைச்சர் அவர்களது உத்தியோகபூர்வ அலுவல்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்கும் அலுவலகம் ஆகும். அத்துடன், அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான கொள்கைப் பிரகடனமான **“60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐந்து அம்ச செயற்பாடுகள்”** எனும் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல், ஊழலை பூண்டோடு ஒழித்தல், சுதந்திரத்தை உறுதி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குதல், கல்வி மட்டம் மற்றும் அதன் தரத்தை முன்னேற்றுதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக தேசத்தில் சௌபாக்கியத்தை ஏற்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவது இந்த அலுவலகத்தின் அலுவல் ஆகும்.

அதற்கமைய,

1. அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல்

2. பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைப்பு மற்றும் அவற்றின் முன்னேற்றத்தின் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

3. பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்கு பதில் தயாரித்தல்

4. பிரதம அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை நிருபம், அமைச்சவை குறிப்புக்கள், சட்ட மூலங்களுடன் தொடர்பான அலுவல்கள்

5. பிரதம அமைச்சர் அவர்களுக்கு வெளிநாட்டு தூதுக் குழுக்கள், வெளி நாட்டு தூதரக சேவை அதிகாரிகளுடன் தொடர்புகளை பேணி வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்

6. பிரதமரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்

7. கௌரவ பிரதமர் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

8. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மற்றும் அரச அதிகாரிகளுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்காக நாட்டுக்கு வெளியே செல்வதற்கு பிரதமரின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல்

9. விசேட சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடாத்துதல்

10. பிரதமரிடம் முன்வைக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

11. அலரி மாளிகை, பிரதம அமைச்சர் அலுவலகம், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பங்களாக்களை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்

12. பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

13. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

## 2. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு

### 2.1 பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்

வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பொருளாதார, சமூக, அரசியல், சூழலியல், மதம், கலாசாரம் என்ற ரீதியில் அனைத்துத் துறை சம்பந்தமாகவும் பரஸ்பர தொடர்புகளை விரிவுபடுத்தும் நோக்கில் இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் அநேகமானோரை சந்தித்ததுடன், அது தொடர்பான பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

#### 2.1.1இந்திய விஜயம்



இலங்கையின் நெருங்கிய நட்பு நாடான இந்தியாவுடன் புராதன காலந்தொட்டு பேணி வரப்படும் தொடர்புகளை மென்மேலும் விருத்தி செய்யும் வகையில் இலங்கையின் பிரதம அமைச்சர் அவர்கள் 2015 செப்டெம்பர் மாதம் 14 - 16 ஆம் திகதிகளில் முதல் இந்திய விஜயத்தை மேற்கொண்டார். தேசிய நல்லிணக்கத்தை பலப்படுத்துமுகமாக மிகப் பொருத்தமான அரசியல் சூழல் தற்போது இலங்கையில் நிலவி வருவதாகவும், அது இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் நிலவும் வரலாற்று ரீதியான தொடர்புகளை பலப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும், அது தொடர்பாக இலங்கையின் பிரதமருக்கும் புதிய அரசாங்கத்திற்கும் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கை பிரதமருக்கும், புதிய அரசாங்கத்திற்கும் எதிர் கால நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு தனது நல்லாசிகளை தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோதி அவர்கள் இலங்கையின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களைச் சந்தித்தபோது இந்திய மக்கள் மற்றும் இந்திய அரசாங்கம் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளதாகவும் சர்வதேச ரீதியாக இலங்கைக்காக பூரண ஒத்துழைப்பை நல்குவதற்கு தயாராக இருப்பதாகவும், இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதார, சக்தி, சுற்றுலாத்துறை, கல்வி, சமயம், கலாசாரம், விவசாயம், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் கூறினார்.

இலங்கை பிரதம அமைச்சரின் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்திய அரசுடன் இலங்கையின் பதிய அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு உதவும் பின்வரும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

(ஐ) உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் கல்வி நிறுவனங்கள் ஊடாக சிறிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு மற்றும் உதவி வழங்குவதற்கான ஒப்பந்தங்கள்

(ஐஐ) வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் 200 கட்டில்களைக் கொண்ட வாட்டுக்குத் தேவையான சகல வைத்திய உபகரணங்களையும் இந்தியாவினால் பெற்றுக் கொடுப்பதற்கான ஒப்பந்தம்.

(ஐஐஐ)இலங்கையில் அவசர ஆம்புலன்ஸ் சேவையொன்றை தாபிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் உதவி வழங்கும் ஒப்பந்தம்.

இது தவிர சார்க் பிராந்திய செய்மதி செய்திப் பரிமாற்றம் தொடர்பான செயற் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்களைச் சந்தித்ததுடன் அச்சந்திப்பின்போது அவர், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் நிலவும் அரசியல் மற்றும் சமூகத் தொடர்புகளை பலப்படுத்துவதற்காக நிதமும் ரணில் விக்ரமசிங்க அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பைப் பாராட்டுவதாகக் கூறினார்.

இந்த சந்திப்பின்போது பிரதமர் அவர்கள் பிராந்திய சமுத்திரப் பாதுகாப்பு சம்பந்தமாக பூரண மீளாய்வொன்றை மேற்கொள்வது மிகப் பொருத்தமெனக் கூறினார். இந்த விஜயத்தின்போது இலங்கையின் பிரதமர் மற்றும் இந்திய நிதி அமைச்சருக்கிடையில் நடைபெற்ற நீண்ட நேரக் கலந்துரையாடலின்போது இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பிரயாணிகளை இந்த நாட்டிற்கு அழைத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கமைய இலங்கையின் பல்வேறு துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான உத்தேச வேலைத் திட்டங்களை பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொ.இல | வேலைத் திட்டம் | பொறுப்பு ஒப்படைக்கப்படும் அமைச்சு |
|---|---|---|
| **01** | இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலவல்கள் அமைச்சு |
| **02** | இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையிலான பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்புகளை ஏற்படுத்தல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்புக்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, சட்டம் மற்றும் ஒழுங்குகள், தெற்கு அபிவிருத்தி அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள் குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு. |
| 03 | வடக்கு மற்றம் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்ட இந்திய அரசின் உதவியுடன் அவசர ஆம்புலன்ஸ் சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல். | சகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு |
| **04** | உத்தேச எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் எண்ணெய் தாங்கிகளை நிர்மாணித்தல் தொடர்பான கூட்டு வர்த்தகத் திட்டத்தை செயற்படுத்தல்<br><br>எரிவாயுப் படிமம் கண்டுபிடிப்புக்கு இந்திய கம்பனிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்<br><br>கனிய எண்ணெய்க்காக நெகிழ்வான விலை வாய்ப்பாடொன்றை அறிமுகஞ் செய்தல்<br><br>சபுகஸ்கன்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீளமைத்தல்.<br><br>எண்ணெய் ஆய்வுக்கான பிரேரணைகளைக் கோரும்போது இந்திய கம்பனிகளுக்கும் ஏலத்தை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்<br>இந்த நாட்டில் இந்திய எண்ணெய் கம்பனியின் கிளைகள் திறக்கப்படுவதனை துரிதப்படுத்தல் | கனிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு |

| தொ .இல | வேலைத் திட்டம் | பொறுப்பு ஒப்படைக்கப்படும் அமைச்சு |
|---|---|---|
| **05** | தோட்டங்களை அண்டிய பிரதேசங்களின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவை அபிவிருத்தி செய்தல் | கல்வி அமைச்சு |
| **06** | திருகோணமலையை அபிவிருத்தி செய்தல் | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு.<br>நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு |
| **07** | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடமைப்பு மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு,மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு.<br>வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சு. |
| 08 | இந்தியப் பிரதமர் மற்றும் இந்திய அமைச்சர்களுக்கு இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தல் மற்றும் முதல் தடவையாக இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியாவுக்குச் செல்வதற்கான வாய்ப்பினை வழங்குதல் | வெளிவிவகார அமைச்சு<br>பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| **09** | சாம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை செயற்படுத்தல் | கனிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு<br>மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சு |
| 10 | இந்திய முதலீட்டாளர்களை இந்த நாட்டுக்கு அழைப்பதற்காக விசேட முதலீட்டு வலயங்களை உருவாக்குதல்.<br>மருந்துகள் மற்றும் ஆடைத் தொழில் துறை வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை பலப்படுத்தல்.<br>இந்திய முதலீட்டாளர்களின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் மாநாட்டை 2016 பெப். 20 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் நடாத்துதல்.<br>விசேட பொருளாதார வலயத்தை திருகோணமலையில் அமைத்தல். | அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| **11** | சர்வதேச பௌத்த மாநாட்டை இலங்கையில் நடாத்துதல் | பௌத்த சாசன அமைச்சு |
| **12** | பலாலி விமான நிலையம் வரை நேரடி விமானப் பயணத்தை ஆரம்பித்தல்<br>காங்கேசன்துறை துறைமுகத்தை மீளமைத்தல்.<br>தூத்துக்குடி, கொழும்பு, இராமேஸ்வரம் மற்றும் மன்னார் இற்கிடையில் படகுத்துறை (குநசசல) சேவையை ஆரம்பித்தல் | துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>வெளி விவகார அமைச்சு |

| தொ.இல | வேலைத் திட்டம் | பொறுப்பு ஒப்படைக்கப்படும் அமைச்சு |
|---|---|---|
| **13** | தீர்வை வரி தவிர்ந்த தடைகளை நீக்குதல் | நிதி அமைச்சு |
| **14** | உயர் பெறுமதியைக் கொண்ட விவசாய உற்பத்திகளை உருவாக்குவதற்காக அரச பல்கலைக்கழகங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல் | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு<br>கமத்தொழில் அமைச்சு |
| **15** | சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி திட்டத்திற்காக 500 ஏக்கர்களை ஒதுக்குதல். | மின்சக்தி மற்றும் புதிப்பிக்கதக்க சக்தி அமைச்சு |
| **16** | இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் மேம் பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| **17** | இலங்கை மற்றும் இந்திய மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல் | மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு |
| 18 | பெரிய கப்பல்களை பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் | துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு |
| **19** | இலங்கையின் புகையிரதப் பாதைகளை அபிவிருத்தி செய்தல்.<br>சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக ஒன்றிணைந்த வேலைத் திட்டங்களை செயற்படுத்தல் | போக்குவரத்து அமைச்சு |
| **20** | சுற்றுலாத்துறையில் இந்திய முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்தல் | சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு |
| 21 | அரச மற்றும் தனியார் துறை செயற் திட்டமாக பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | பாதுகாப்பு அமைச்சு |

### 2.1.2 ஜப்பான் விஜயம்



ஜப்பான் பிரதமரின் அழைப்பை ஏற்று 2015 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கையின் பிரதமர் அவர்கள் இலங்கையின் பொருளாதார, சமூக, கலாசார, அரசியல், கல்வி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளுடன் தொடர்பான முக்கிய பல சாதகமான தீர்மானங்களை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது இலங்கையின் பிரதம அமைச்சர் ஜப்பான் பிரதம அமைச்சர் உட்பட ஜப்பானின் பல விசேட நபர்களைச் சந்தித்து இலங்கையின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அத்திவாரத்தை இட்டார். அதற்கமைய இலங்கையின் பொருளாதார விருத்தி மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை கவனத்திற் கொண்டு “விரிவான கூட்டு நடவடிக்கை”யின் கீழ் காணப்படும் பல்வேறு துறைகளில் விருத்தியை இரு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக,

I. முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புக்களை விருத்தி செய்தல்

II. இலங்கை தேசிய அபிவிருத்தி திட்டம் தொடர்பாக ஒத்துழைப்பை ஏற்படுத்தல்

III. தேசிய நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத் திட்டங்கள் மற்றும் அமைச்சுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொ. இல | வேலைத் திட்டம் | பொறுப்பு ஒப்படைக்கப்படும் அமைச்சு |
|---|---|---|
| 01 | பிராந்திய விஞ்ஞானிகளின் பங்கேற்புடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சமூக மாநாட்டை இலங்கையில் நடாத்துதல் (இங்கு ஜப்பான் விஞ்ஞானிகளை இலங்கைக்கு அழைத்து அவர்களுடன் உள்நாட்டு விஞ்ஞானிகளை கலந்துரையாடலில் ஈடுபடச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது) | விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு |
| 02 | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தை விரிவு படுத்தல்<br>முனையக் கட்டிடம் மற்றும் விமான ஓடுபாதைகளை நிர்மாணித்தல்<br>பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை தெற்காசிய பிராந்தியத்தின் மத்திய விமான நிலையமாக மாற்றியமைத்தல் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு |
| 03 | தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகள் டிஜிட்டல்மயப்படுத்தல் சம்பந்தமாக ஜப்பானின் பிரேரணைகளை செயற்படுத்தல் | தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உடகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 04 | இந்த நாட்டில் ஜப்பான் தனியார் கம்பனிகளுக்கு முதலீட்டிற்கான வாய்ப்பினை அளித்தல் | அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| 05 | வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நிலவும் நிதித் தடைகள் மற்றும் வரையறைகளை நீக்கி எதிர்கால சந்ததிக்காக பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ளல் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தல். | அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| 06 | ஐ.நா.பாதுகாப்பு சபையின் நிரந்தர ஆசனத்திற்கான ஜப்பானின் வேண்டுகோள் சம்பந்தமாக இலங்கையின் ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்குதல் | வெளிவிவகார அமைச்சு |
| 07 | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக ஜப்பான் வர்த்தக நிறுவனங்களுடன் அரச மற்றும் தனியார் ஒன்றிணைந்த திட்டமொன்றை செயற்படுத்தல் | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு<br>நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு |
| 08 | அம்பாந்தோட்டை துறைமுகத்தை சலுகை துறைமுகக் கட்டணத்தை அறவிடும் துறைமுகமாக மாற்றியமைத்தல் | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு |
| 09 | இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையில் அரசியல், பொருளாதார விடயங்கள் சம்பந்தமாக இரு நாடுகளினதும் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் | வெளிவிவகார அமைச்சு |

| தொ. இல | வேலைத் திட்டம் | பொறுப்பு ஒப்படைக்கப்படும் அமைச்சு |
|---|---|---|
| 10 | இலங்கையின் பொருளாதாரம் சம்பந்தமாக விபரமான ஆய்வை மேற்கொள்ளல். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 11 | கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல். | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு |
| 12 | ஜப்பான் அரசாங்கத்தின் உத்துழைப்புடன் திருகோணமலையை அபிவிருத்தி செய்தல் | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு<br><br>அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| 13 | வடக்கு, கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்தல் | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்த மத அலுவல்கள் அமைச்சு |
| 14 | கண்டி நகரை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கண்டி நகரை அபிவிருத்தி செய்தல். | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,<br>நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு |
| 15 | கலாசார சுற்றுலாத்துறைப் பிரிவு மற்றும் சூழல் சுற்றுலாத்துறைப் பிரிவை அபிவிருத்தி செய்தல். | சுற்றுலாத்துறை மற்றும் கிறுஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு |
| 16 | இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல். | நிதி அமைச்சு,<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 17 | கடற்பகுதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பாதுகாப்பு அமைச்சு |
| 18 | கைத்தொழில் மற்றும் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான புதிய தொழில்நுட்ப அறிவை பரிமாறிக் கொள்ளல். | கமத்தொழில் அமைச்சு,<br>முதன்மை கைத்தொழில் அமைச்சு |
| 19 | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பொருளாதார சக்தியை விருத்தி செய்தல். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 20 | ஜப்பான் கப்பல்களை இலங்கைத் துறைமுகங்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | பாதுகாப்பு அமைச்சு |
| 21 | கொழும்பு கப்பல் கட்டும் தளத்தை அபிவிருத்தி செய்தல் | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு |
| 22 | இலங்கையில் மனித வளங்கள் அபிவிருத்தி, தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்திக் கொள்வதற்காக ஜப்பானின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 23 | நவம்பர் மாதம் 5 ஆம் திகதி உலக சுனாமி தினமாக பெயரிடுவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல் | வெளிவிவகார அமைச்சு |

இலங்கையின் புதிய தேசிய அரசாங்கம் வடக்கு, கிழக்கு மோதல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சமூக - பொருளாதார பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளை ஜப்பான் பிரதமர் பாராட்டினார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளுக்கும் ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது.

- நீர் வழங்கல் உட்பட சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- மன்னாருக்கு கல்விக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தை மேம்படுத்தல்
- மின் உற்பத்தி மற்றும் மின்சாரம் வழங்கலுக்கான பிரதான திட்டத்தை முறையாக தயாரித்தல் உட்பட மின்சாரத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல்
- அதிவேகப் பாதைகள் மற்றும் கண்டி நகரின் நகரத் திட்டம் போன்ற பிரதான செயற் திட்டங்களுக்காக ஜப்பானின் உயர் நிபுணத்துவ அறிவு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளல்

ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கையின் பிரதம அமைச்சர் இலங்கையின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கு மட்டுமன்றி சர்வதேச சமூகத்தின் அபிவிருத்திக்கு துணைபுரியும் விடயங்கள் மீது கவனத்தை ஈர்த்தமையும் விசேட அம்சமாகும்.

ஆட்கடத்தல்கள் சம்பந்தமான பிரச்சினைக்கு துரிதமான தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் உட்பட சர்வதேச சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பாக கவனத்தை ஈர்க்குமாறு இலங்கையின் பிரதமர் மற்றும் ஜப்பான் பிரதமர் வட கொரியாவிடம் மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அணு ஆயுதங்களற்ற உலகத்தின் நிமித்தம் அணு ஆயுதங்களை கைவிடலுடன் சம்பந்தமான செயற்பாடுகளுக்காக மற்றும் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை பிரதமர் நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் இந்த விஜயத்தின்போது குறிப்பிட்டார்.

### 2.1.3 சிங்கப்பூர் விஜயம்



இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க அவர்கள் 2015 ஒக்டோபர் மாதம் 16 - 17 ஆம் திகதிகளில் சிங்கப்பூர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கையின் புதிய அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் துரித அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு துணைபுரியும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கைப் பிரதமர் மற்றும் சிங்கப்பூர் பிரதமரை சந்தித்து இரு நாடுகளுக்குமிடையே தற்போது நிலவும் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு இலங்கையின் புதிய அரசியல் பின்னணி மிகவும் ஆரோக்கியமானதென சிங்கப்பூர் பிரதமர் கூறினார்.

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கிடையில் நிலவும் தொடர்புகளை கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற பிரிவுகள் உட்பட பல்வேறு பிரிவுகள் ஊடாக பலப்படுத்துவதற்குத் தேவையான அத்திவாரத்தை பிரதமர் இந்த விஜயத்தின்போது இட்டார். அதற்கமைய, இலங்கையின் சிவில் சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக்கான சந்தர்ப்பத்தை சிங்கப்பூரில் பெற்றுக் கொடுப்பதற்கும், இந்த நாட்டில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் வசதிகளை மறுசீரமைப்பதற்கும் சிங்கப்பூர் முதலீட்டாளர்களை இந்த நாட்டுக்கு அழைப்பதற்கும் புதிய வர்த்தக ஒப்பந்தங்களை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இது தவிர கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகளை அதற்குப் பொறுப்பான அமைச்சுக்களின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

| தொ. இல | வேலைத் திட்டம் | அமைச்சு |
| --- | --- | --- |
| 01 | இலங்கையின் சிவில் சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக்கான சந்தர்ப்பத்தை சிங்கப்பூரில் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனூடா அரச சேவையை வினைத்திறன்மிக்கதாக மாற்றியமைத்தல்<br><br>இலங்கையின் பயிற்சி நிலையங்களின் வசதிகளை மறுசீரமைத்தல். | அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு,<br>நிதி அமைச்சு,<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,<br>உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,<br>பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு<br>பிரதம அமைச்சர் அலுவலகம் |
| 02 | சிங்கப்பூர் முதலீட்டாளர்களுக்கு இந்த நாட்டில் முதலீட்டுக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்<br><br>துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல்.<br><br>இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை எற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் | அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| 03 | இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கான முகவர் நிறுவனங்களை ஏற்படுத்தல்.<br>வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்தல்,<br>பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திகளை உருவாக்குவதற்கு உதவி வழங்குதல்,<br>தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறை பிரிவுகளுக்கு முன்னுரிமை அளித்து இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு<br>மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு<br>தென் மாகாண அபிவிருத்தி அமைச்சு<br>கமத்தொழில் அமைச்சு<br>சுற்றுலாத்துறை மற்றும் கிறுஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு<br>விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு |
| 04 | அரச தொழில் முயற்சிகளை மறுசீரமைப்பதற்கான திட்டங்களை தயாரித்தல் | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 05 | அரச சேவையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்<br>2500 கிராமீய அரச அபிவிருத்தி மையங்களை தாபித்தல் | அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவம் பற்றிய அமைச்சு,<br>உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு |

## 2.2. இராஜ தந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்தல

| இல | திகதி | சந்தித்த இராஜ தந்திரிகள் |
|---|---|---|
| **01** | **2015.01.15** | மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி கௌரவ முஹம்மட் நஷீட் அவர்கள் |
| **02** | **2015.01.28** | பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அமைப்பு சம்பந்தமான அமைச்சர் கௌரவ ஹியூகோ ஸ்வேரிஅவர்கள் (Hon. Hugo Swire) |
| **03** | **2015.02.02** | பொது நலவாய அமைப்பின் செயலாளர் கௌரவ கமலேஷ் ஷர்மா அவர்கள் |
| **04** | **2015.02.02** | அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர், நிசா பிஸ்வால் அம்மையார் |
| **05** | **2015.02.06** | சீன அரசின் விஷேட பிரதிநிதி கௌரவ லியூ ஜின்சாவோ அவர்கள் |
| **06** | **2015.02.20** | உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர், அனட் டிக்ஸன் அவர்கள் |
| **07** | **2015.02.24** | சிங்கப்பூரின் வெளிவிவகார மற்றும் நீதி அமைச்சர் கௌரவ கே.சண்முகம் அவர்கள் |
| **08** | **2015.02.24** | தென் ஆபிரிக்காவின் வெளிவிவகார பிரதி அமைச்சர் கௌரவ நொமைன்டியா மப்கெதோ அவர்கள் (Hon. Nomaindiya Mfeketo) |
| 09 | 2015.02.25 | மலேசியாவின் விஷேட பிரதிநிதி கௌரவ தாத்தோ செரி உத்தமா எஸ் சாமி வேலு அவர்கள்**(Hon. Dato Seri Utama S Samy Vellu)** |
| **10** | **2015.03.06** | ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர் ஜான் சராடில் அவர்கள் **(Mr. Jan Zahradil)** |
| 11 | **2015.03.07** | இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ சுஷ்மா சுவராஜ் அம்மையார் |
| **12** | **2015.03.07** | ஜப்பான் வெளி விவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ மினோரா கியூச்சி அவர்கள் **(Hon. Minoru Kiuchi)** |
| 13 | **2015.03.13** | இந்தியாவின் பிரதம அமைச்சர் கௌரவ ஸ்ரீ நரேந்திர மோதி அவர்கள் |
| **14** | **2015.03.17** | சுவிட்சலாந்தின் சமஷ்டி அரசின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ (கலாநிதி)திதிர் பக்ஹோலடர் அவர்கள் (H/E Dr. Didier Burkhalter) |
| 15 | **2015.03.20** | பங்களாதேஷ், பூட்டான், இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கான உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் திரு.சுபாஷ் சந்திர காஜ் அவரகள் (Mr. Subash Chandra Garg) |
| 16 | **2015.03.31** | திரு. போல் கொரொவ் தலைமையிலான அமெரிக்க சங்கத்தின் பிரதிநிதிகள் |
| **17** | **2015.04.10** | பூட்டானின் பிரதமர் கௌரவ செரின் டொப்கே அவர்கள் (Hon. Tshering Tobgay) |
| **18** | **2015.05.02** | ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் கௌரவ ஜோன் கெரி அவர்கள் |
| **19** | **2015.05.05** | அவுஸ்த்ரேலியாவின் குடிவரவு மற்றும் கரையோரப் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ பீட்டர் டட்டின் அவர்கள் |

| இல | திகதி | சந்தித்த இராஜ தந்திரிகள் |
|---|---|---|
| **20** | **2015.05.12** | டாடா வீடமைப்பு அபிவிருத்தி சங்கத்தின் புரோட்டின் பனார்ஜீ அவர்கள் (Mr. Brotin Banerjee) |
| 21 | 2015.05.12 | வெஸ்மினிஸ்டர் அமைப்பின் அங்கத்தவர் குழு |
| **22** | **2015.05.21** | மலேசியாவின் விஷேட பிரதிநிதி கௌரவ சாமி வேலு அவர்கள் |
| **23** | **2015.05.27** | பீஜீ இன் தலைமை நீதிபதி கௌரவ ஆனந்தி கேட்ஸ் அவர்கள் |
| **24** | **2015.05.27** | திரு மதூ கண்ணனின் தலைமையிலான TATA கம்பனியின் நிறைவேற்றுப் பிரதிநிதிகள் |
| **25** | **2015.06.04** | ஜேர்மனின் விஷேட பிரதிநிதி கௌரவ டெக்மார் வோர்ல் அம்மையார் **(Mrs. Dagmar Wohrl)** |
| 26 | 2015.06.08 | பாகிஸ்தானின் இராணுவ ஆளணி தலைமை அதிகாரி ஜெனரல் ரஹீல் ஷெரீப் அவர்கள் |
| 27 | **2015.06.11** | யுனெஸ்கோ அமைப்பின் சூழல் நேய தொழில்நுட்ப சங்கத்தின் ஆரம்பத் தலைவர் பேராசிரியர் எம் எஸ் சுவாமிநாதன் அவர்கள் |
| 28 | **2015.06.26** | இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி (கலாநிதி) கௌரவ அப்துல் கலாம் அவர்கள் |
| 29 | **2015.07.21** | ஐரோப்பிய சங்கத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரானி திரு.கிரிஸ்டியன் பிரீடா அவர்கள் |
| 30 | **2015.08.12** | இந்தியாவின் **GVK** குழு |
| **31** | **2015.08.15** | ஐரோப்பிய பாராளுமன்ற குழு |
| **32** | **2015.08.24** | பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் கௌரவ டோனி பிளெயார் அவர்கள் |
| **33** | **2015.08.25** | அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர், நிசா பிஸ்வால் அம்மையார் |
| **34** | **2015.09.01** | ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ஹமீட் கர்ஷாய் அவர்கள் **(Hon. Hamid Karzai)** |
| 35 | **2015.09.04** | தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதி கௌரவ ஜாகொப் சுமா அவர்கள் |
| **36** | **2015.09.18** | உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர், அனட் டிக்ஸன் அவர்கள் |
| 37 | **2015.09.08** | ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் பிரதி செயலாளர் மற்றும் ஆமிடேஜ் சர்வதேச அமைப்பின் அமைப்பின் தலைவர் ரிச்சட் ஆமிடேஜ் அவர்கள் |
| 38 | **2015.09.22** | ஜேர்மனின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ பிரேங்க் வோல்ட்டர் ஸ்டேன்மியர் அவர்கள் (Hon. Frank Walter Steinmeier) |
| 39 | 2015.10.09 | சீன அரசின் விஷேட பிரதிநிதி லியூ சென்மின் அவர்கள் மற்றும் சீன வெளி விவகார பிரதியமைச்சர் அவர்கள் (Mr. Liu Zhenmin) |

| இல | திகதி | சந்தித்த இராஜ தந்திரிகள் |
|---|---|---|
| 40 | 2015.10.21 | மனித உரிமைகள் பாதுகாப்பு சம்பந்தமான ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் கௌரவ பிரெட் அடம்ஸ் அவர்கள் மற்றும் சட்ட கொள்கைகள் பணிப்பாளர் கௌரவ ஜேம்ஸ் ரோஸ் அவர்கள் (Mr. Brad Adams and Mr. James Ross)<br><br>முன்னாள் கம்போடிய அதிவிசேட நீதிமன்ற நீதியரசர் மற்றும் ஜப்பான் உயர் நீதிமன்றத்தின் பிரதம சட்டப் பிரதிநிதி மொட்டோ நுகுச்சி அவர்கள்- Mr. Moto Nuguchi |
| 41 | 2015.10.22 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் அரசியல் அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பொதுச் செயலாளர் கௌரவ மிரோஸ்லவ் ஜென்கா அவர்கள் (Mr. Miroslav Jenca) |
| 42 | 2015.10.23 | மலேசிய விசேட பிரதிநிதி டெட்டோ சாமி வேலு அவர்கள் (Mr. Dato Sami Vellu) |
| 43 | 2015.11.02 | நியூசிலாந்தின் ஒக்லன்டின் பிரதேச வசதிகள் பற்றிய தலைவர் சேர் தொன் மெக்னன் அவர்கள் (Sir Don McKinnon ) |
| 44 | 2015.11.10 | பாகிஸ்தான் சமஷ்டி அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் கௌரவ குராம் டெஸ்டிகிர் கான் அவர்கள் (Hon. Engr.Khurram Dastigir Khan)<br><br>ஐக்கிய அமெரிக்க குடியரசின் காங்கிரஸ் உறுப்பினர் ஜிம் சென்சென்பிரினர் அவர்கள் உட்பட்ட தூதுக் குழுவினர் (Jim Sensenbrenner) |
| 45 | 2015.11.16 | ஜெனீவா ஐ.மு.ஆ தலைமையகத்தின் புலம்பெயர்ந்தோர் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் கௌரவ லோரன்ஸ் ஹார்ட் அவர்கள் (Mr. Laurence Hart)<br><br>பலாத்காரமாக அல்லது விருப்பமின்றி காணாமற்போனோர் சம்பந்தமான அலுவல் குழு |
| 46 | 2015.11.17 | கடல் மற்றும் மீன் பிடி நடவடிக்கைகள் சம்பந்தமான பிரதம ஆலோசகர் கௌரவ சேசர் டேபன் அவர்களுடான தூதுக் குழு (Mr. Cesar Deben) |
| 47 | 2015.11.23 | ஐக்கிய அமெரிக்காவின், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தரப் பிரதிநிதி கௌரவ சமந்தா பவர் அம்மையார் ( Mr. H.E. Samantha Power) |
| 48 | 2015.11.30 | ஐக்கிய அமெரிக்காவின் முதலீட்டாளர் ஜோர்ஜ் சோரோஸ் அவர்களுடனான தூதுக் குழு (Mr. George Soros)<br><br>இந்திய இராணுவத்தின் ஆளணித் தலைமை அதிகாரி ஜெனரல் தல்பீர் சிங் அவர்கள் **(hgniS riblaD .neG)** |
| 49 | 2015.12.16 | ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய உப இராஜாங்க செயலாளர் தூதுவர் தோமஸ் செனோன் அவர்கள் ( Mr. Thomas Shannon) |

## 3. கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள்

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பது அறிவின் அடிப்படையாகக் கொண்ட போட்டித் தன்மை வாய்ந்த சமூக சந்தைப் பொருளாதாரமாகும். அதன் அடிப்படையில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின்போது பொருத்தமான கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை நிச்சயித்துக்கொள்ளுதல் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.1 பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழு

பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக 2015.09.22 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டதுடன் குழுவின் அலுவல்கள் பின்வருமாறு,

I. பொருளாதார அலுவல்கள், நிதிக் கொள்கைகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் தொடர்பிலான அமைச்சரவை நிருபங்களை பரிசீலித்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

II. தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் பொது முதலீட்டுத் திட்டம் போன்றவற்றை தயாரிக்கும் போது மற்றும் தனியார் துறை முதலீடுகளை இலகுபடுத்துவதற்காக ஆலோசனை வழங்குதல்.

III. பொருளாதார மற்றும் நிதி ரீதியான தெளிவற்ற தன்மையைக் கொண்ட பிரேரணைகள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைத்தல், மற்றும்

IV. நாட்டின் முதலீடு /பொருளாதார அபிவிருத்தியில் நேரடியான தாக்கத்தை செலுத்தும் பல்வேறு சட்டங்களை செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்புக்குட்படுத்தல்.

குழுவில் அடங்குவோர்

| | | |
|---|---|---|
| 1 | கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் | பிரதம அமைச்சர் (தலைவர்) |
| 2 | கௌரவ நிமல் சிரிபால த சில்வா அவர்கள் | போக்குவரத்து அமைச்சர் |
| 3 | கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்கள் | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் |
| 4 | கௌரவ அனுர பிரியதர்சன யாப்பா அவர்கள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் |
| 5 | கௌரவ ரவீ கருணாநாயக்க அவர்கள் | நிதி அமைச்சர் |
| 6 | கௌரவ பாட்டலி சம்பிக ரணவக்க அவர்கள் | மா நகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் |
| 7 | கௌரவ கபீர் ஹஸீம் அவர்கள் | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் |
| 8 | கௌரவ அர்ஜுன ரணதுங்க அவர்கள் | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சர் |
| 9 | கௌரவ சாகல ரத்நாயக்க அவர்கள் | தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் |
| 10 | கௌரவ மலிக் சமரவிக்கிரம அவர்கள் | அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் |
| 11 | கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்கள் | சிறப்புப் பணிகள் அமைச்சர் |

பிரதம அமைச்சரின் செயலாளர் குழுவின் செயலாளராகப் பணியாற்றுவார். 2015.12.31 ஆம் திகதியாகும்போது 11 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவு சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வெளியிடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் / வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் |
|---|---|
| **தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள்** | உத்தேச தனியார் துறையினருக்கான சம்பளத்தை அதிகரித்தல் தொடர்பாக சட்ட வரைவை தயாரித்தல். |
| | சம்பள அதிகரிப்பு, ஊழியப் படையின் உற்பத்தித் திறன் விருத்தி மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் இணைக்கும் முறைகள் பற்றி ஆராய்தல். |
| | சம்பள சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு சம்பள சபை கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல். |
| | ஊழியர்களின் வரவு செலவு சலுகைக் கொடுப்பனவு சட்ட மூலத்தை அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு அங்கீகாரத்திற்காக சிபாரிசு செய்தல் |
| | |
| **நிதி** | கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பல்வேறு பிரிவுகளுக்காக வழங்கப்படும் நலனோம்புகை நன்மைளை மீளாய்வுக்குட்படுத்தல் |
| | தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக 4 மாதங்களுக்கான சோளத்தினை இறக்குமதி செய்தல் |
| | 2016 வரவு செலவுத் திட்டத்தில் உத்தேச சுற்றுலாத்துறை அபிவிருத்திக் கட்டணத்தை இரத்துச் செய்வதற்கு மற்றும் பிறிதொரு பெயரின் கீழ் வேறான முறையொன்றினைப் பயன்படுத்தி அந்தக் கட்டணத்தை சேகரிப்பதற்கும் சற்றுலாத்துறை அபிவிருத்திக்காக மாத்திரம் பிறிதொரு நிதியத்தை திறைசேரியின் கீழ் தாபித்தல் |
| | பாடசாலை சீருடையை வவுச்சர் முறையின் கீழ் ஒரே தடவையில் பணத்தைச் செலுத்துவதற்காக நிதியை வழங்குதல் |
| | சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக பசளைக்கான உத்தேச நிவாரணத் தொகையில் குறைந்தது **10%** இனை கூட்டுப் பசளைக் கொள்கலன்களுக்காக பெற்றுக்கொடுத்தல் |
| | கடன் முகாமைத்துவத்தை செயலாற்றுகை மதிப்பீட்டின் அடிப்படையில் அறிக்கைப்படுத்துவதற்காக உலக வங்கியினால் முன்மொழியப்பட்டுள்ள கடன் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக வேறான அலுவலகமொன்றை தாபித்தல் |
| | நெல் சந்தைப்படுத்தும் சபையினால் இலங்கை வங்கிக்கு மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய பணத்தை முன்னுரிமை அடிப்படையில் நெல் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தினால் ஈடு செய்தல். |
| | 2016 வரவு செலவு மற்றும் வருமானத்தைச் சேகரிக்கும் முறை சம்பந்தமாக கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்குதல் |
| | |
| **போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை** | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டியுள்ள பங்களிப்புத் தொகையைச் செலுத்துவதற்காக இ.போ.ச காணிகளை உரிமை மாற்றம் செய்தல் |
| | இ.போ.ச.வுக்கு மேலும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதனை நிறுத்துவதற்கு மற்றும் நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு சிறந்த மட்டத்திலான ஊழியர் எண்ணிக்கையை தீர்மானித்தல் |
| | இ.போ.ச டிப்போக்கள் அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்கு முடியுமான வகையிலான திட்டங்களை உருவாக்குதல் |
| | பொது மக்களுக்கு சிறப்பான சேவையொன்றைப் பெற்றுக் கொடுக்குமுகமாகபுகையிரத சேவை முகாமைத்துவத்தை மறுசீரமைத்தல் |
| | இ.போ.ச. வினை மறுசீரமைக்கும் திட்டமொன்றை உருவாக்குவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு |
| | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது ஓடுபாதையை நிர்மாணிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு மாற்றுத் திட்டங்களையும் தொழில்நுட்ப நிபுணத்துவக் குழுவிடம் ஆய்வுக்குவிடல். |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் |
|---|---|
| **போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை** | மத்தளை வரை விமானப் பயணச் செயற்பாடுகளுடன் தொடர்பான ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சலுகைகளை நீக்கிக் கொள்வதற்கு கீழ் கடல – னுரடியஎ விமானக் கம்பனிக்கு மத்தளை வரையான விமானப் பயணத்தை நிறுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல். |
| | கொழும்பக்கு அல்லது களுத்துறைக்கு அண்மையிலுள்ள பிரதேசமொன்றில் இரத்மலானை விமான நிலையத்தை மீளமைத்தல் |
| | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தற்போது காணப்படும் ஓடு பாதையில் மேற்பரப்பை சீர் செய்தல் சம்பந்தமாக மற்றும் இரண்டாவது விமான ஓடு பாதையை நிர்மாணித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட கொள்கை ரீதியிலான கட்டளைகள |
| | நிதி ரீதியாக இலாபகரமான வர்த்தகமாக மாற்றியமைப்பதற்காக இ.போ.ச.வை மறுசீரமைத்தல் சம்பந்தமாக வழங்கப்பட்ட கொள்கை ரீதியிலான கட்டளைகள். |
| | தாமதங்களைக் குறைப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் எரிபொருள் குழாய் முறைக்காக நிதியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல் போன்ற இரண்டு மாற்று வழிகளும் உள்ளடக்கப்பட்ட விலைமனுக்களுடன்கூடிய தயாரிக்கப்பட்ட கேள்வி அழைப்பு. |
| | கீழ் குறிப்பிடப்படும் விமான நிலையங்களை சுயமாக இலாபமீட்டும் நிலையங்களாக மாற்றியமைத்தல்.<br>- கட்டுநாயக்க விமான நிலையம்<br>- மத்தளை விமான நிலையம் |
| | கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகளின் கீழ் புகையிரதப் பாதைகளுக்குத் தேவையான என்ஜின்கள் மற்றம் பெட்டிகளை கொள்வனவு செய்வதற்காக இந்தியக் கடனைப் பயன்படுத்தல் மற்றும் புகையிரதப் பாதைகளை புனரமைத்தல்<br>- தர மதிப்பீடு<br>- இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் வெளியிடப்பட்டுள்ள கேள்வி நடைமுறை அறிவுரைகளைப் பின்பற்றுதல். |
| | |
| **அனர்த்த முகாமைத்துவம** | நீர் வடிந்தோடுவதற்கு சிறிய மதகுகள் தடையாக இருக்கின்றதா என்பதனைப் பரிசோதிப்பதற்காக சிறிய விமானங்களைப் பயன்படுத்தி வெள்ளம் வடிந்தோடும் செயற்பாடு சம்பந்தமாக ஆய்வை மேற்கொள்ளல். |
| | பயனாளிகளை அறிந்துகொள்வதற்காக அனர்த்த நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் பற்றிய தரவுகளை வெளியிடல் |
| | அனர்த்த முகாமைத்துவத்திற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள கூட்டுத் திட்டத்தை அங்கீகரித்தல். |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் |
|---|---|
| **பெருந்தோட்டத் துறைக் கைத்தொழில்** | தேயிலை உற்பத்தியை புதிய சர்வதேச சந்தைக்கு ஏற்ற வகையில் மேற்கொள்வதற்கான திட்டமொன்றை உருவாக்குதல். |
| | உற்பத்தித் திறனை அதிகரித்து, தேயிலைப் பயிர்ச் செய்கைத் துறையின் உற்பத்திச் செலவை குறைப்பதற்காக திட்டமொன்றைத் தயாரித்தல். |
| | இறப்பர் துறையின் அபிவிருத்திக்காக நேரத்தை அடிப்படையாகக் கொண்ட விபரமான மற்றும் செயற்படுத்த முடியுமான செயற் திட்டமொன்றைத் தயாரித்தல் |
| | தேவையான சூழலியல் தேவைகளின் அடிப்படையில் பயிரிடும் பரப்பளவை வரையறுக்காமல் மகாவலித் திட்டத்திற்குரிய பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தல் |
| | **2015** தீபாவளி வைபவத்திற்காக பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கால முற்பணத்தை கடனாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்வதற்காக பிரதேச பெருந்தோட்டத் துறைக் கம்பனிகளுக்கு கடனொன்றை வழங்குவதன் ஊடாக தேயிலைச் சபைக்கு ஏற்பட்டுள்ள வட்டி நட்டத்தை திறைசேரி ஏற்றுக்கொள்ளல். |
| | ஆய்வொன்றை மேற்கொண்டு இறப்பர் கைத்தொழிலில் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு அறிக்கையொன்றைத் தயாரித்தல் |
| | கொக்கோவுக்கான நிலவும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்காக கொக்கோ பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான காணியை இனங்காணல். |
| | மகாவலிக் காணி தவிர்ந்த பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் காணிகள் உட்பட ஏனைய காணிகளில் தென்னைப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தல். |
| | இறப்பர் துறையின் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமித்தல். |
| | பெருந்தோட்டத் துறைக்கான நிவாரணத்தை வழங்குவது தொடர்பாக கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களை வழங்குதல் |
| | |
| **நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்** | சிலாபம் - புத்தளம் மற்றும் மகரகம - பொரலஸ்கமுவ வடிகாலமைப்புத் தொகுதியை செயற்படுத்தல் |
| | அத்திட்டத்தின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காக வர்த்தக ரீதியிலான மொடியூலொன்றைத் தயாரித்தல் |
| | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வடிகாலமைப்புத் திட்டங்களை முன்னுரிமை வரிசைப்படுத்தல் மற்றும் மேல் மாகாணத்தினுள் அந்த திட்டங்கள் சம்பந்தமாக மா நகர செயல் திட்டத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல் |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் |
|---|---|
| **நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல** | அ) இமதூவ நீர் வழங்கல் திட்டத்தை நீர் வழங்கல் திட்ட மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல்<br><br>ஆ) தெனியாய, அங்குணகொலபெலெஸ்ஸ, ஊறுபொக்க, கலென்பிந்துனுவெவ, ஹத்தரலியத்த, மொரவக்க மற்றும் முருத்தவெல பரவகும்புர நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பான பிரேரணைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு மற்றும் நிதி மற்றும் ஏனைய திட்டங்கள் பற்றிய விபரத்தை மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல் |
| | சுய விருப்பத்தின் பேரில் சலுகை அடிப்படையில் நிதிப் பயன்பாட்டுடன்கூடிய கிடைக்கவிருக்கும் நீர் வழங்கல் திட்டங்களின் மிகச் சிறந்த நம்பகத்தன்மைக்காக பெறுகைகள் நடைமுறைக்கான கொள்கை ரீதியிலான கட்டளைகள். |
| | |
| **உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்** | Marine drive பாதையை தெஹிவளை வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| | ராஜகிரிய மற்றும் பத்தரமுல்லை பிரதேசங்களில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்பாலத்திற்கான சட்ட அங்கீகாரத்தை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதனை துரிதப்படுத்தல். |
| | பாதை மத்திய அதிவேகப் பாதை செயற் திட்டத்தின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு மற்றும் தேவையான பிரகாரம் கொள்கை ரீதியிலான கட்டளைகளை பிறப்பித்தல் |
| | ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் களணிப் பல்கலைக்கழகங்களின் தொழிற் பயிற்சி மற்றும் பொறியியல் பீடத்தை தாபித்தல் |
| | |
| **துறைமுகம் மற்றும் கப்பற்துறை** | கிழக்கு கொள்கலன் இறங்கு துறை செயல் திட்டத்தின் கேள்வி நடைமுறையை துரிதப்படுத்தல் |
| | அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 2 ஆம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கான உபகரணங்களை விலை அளவுகள் தொடர்பாக ஒப்பந்ததாரருடன் மீண்டும் இணக்கப்பாட்டுக்கான கலந்துரையாடலை மேற்கொள்ளல் |
| | அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் மத்தளை விமான நிலையத்தை இலாபகரமான வர்த்தக நடவடிக்கையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றை இனங்காணல் |
| | இலங்கையை பிராந்தியத்தின் இலாபகரமான விமான – சமுத்திர மத்திய நிலையமாக மாற்றியமைப்பதற்காக குழுவொன்றை நியமித்து கூட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல் |
| | அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுக வளவில் முதலீடு சம்பந்தமான கொள்கையளவிலான கட்டளை பிறப்பித்தல் |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள் |
|---|---|
| **துறைமுகம் மற்றும் கப்பற்துறை** | துறைமுக நகர் திட்டம் சம்பந்தமாக கொள்கையளவிலான கட்டளை பிறப்பித்தல் |
| | கீழ் குறிப்பிடப்படும் துறைமுகங்களை சுய இலாபம் ஈட்டும் நிலையங்களாக மாற்றியமைத்தல்<br>- அம்பாந்தோட்டைத் துறைமுகம்<br>- திருகோணமலை துறைமுகம்<br>- காலித் துறைமுகம்<br>- கொழும்பு – தெற்குத் துறைமுகம், வ.ப. சவுத் ஏசியா கேட்வே டர்மினல் தனியார் கம்பனி, ஜெயா இறங்கு துறை, கிழக்குத் துறைமுகம் |
| | |
| **அபிவிருத்தி மூலோபாங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம்** | பிரதம அமைச்சரின் இந்திய மற்றும் ஜப்பான் விஜயங்களின்போத எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதனை துரிதப்படுத்தல் |
| | சன்ங்ரிலா மற்றும் சர்வதேச வர்த்தக நிலையத்திற்காக மின்சார வழங்கலை தாபிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு காணித் துண்டொன்றை ஒதுக்குதல் |
| | முதலீடுகளை துரிதப்படுத்துவதற்கு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை அங்கீகரித்தல் |
| | கைத்தொழில் பூங்காக்களாக அபிவிருத்தி செய்வதற்காக குளியாப்பிட்டி மற்றும் பொருத்தமான பிரதேசங்களில் காணிகளை இனங்காணல். |
| | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழான எந்தவொரு கடல் கடந்த அபிவிருத்திச் செயற்பாட்டிற்கும் இணங்குதல் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான அமைச்சரவைக் குழுவில் கடல் கடந்த அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அங்கீகரித்தல். |
| | அம்பாந்தோட்டை பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் உயிரியல்-எரிபொருள் கலப்புத் திட்டமொன்றுக்கு கொள்கையளவில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் |
| | முதலீட்டு ஊக்குவிப்பு சம்பந்தமாக டோனி பிளெயார் அசோசியேட்ஸ் நிறுவனத்திடமிருந்து ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்ளல். |
| | வாழைச்சேனை காகிதக் கைத்தொழிற்சாலை வளவில் காணப்படும் காணியை கோல்ப் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மற்றும் மட்டக்களப்பு மற்றும் கல்முனைப் பிரதேசங்களில் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியுமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவினை அமைப்பதற்கு முதலீட்டுச் சபைக்கு ஆலொசனை வழங்குதல். |
| | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி முகவர் நிறுவனம் மற்றும் சர்வதேச முகவர் நிறுவனத்திற்கான பொது அலுவல்களை கழு அங்கிகரித்தல். |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியிடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள |
|---|---|
| **வெளி விவகாரம்** | இரு தரப்பு ஒப்பந்தங்களுக்காக பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் அதன் பின்னர் தேவையேற்படின் மீண்டும் கலந்துரையாடுதல். |
| | G.S.P+ சலுகையைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் காணப்படும் காலங்கடந்த சட்டங்களுக்குப் பதிலாக புதிய சட்டங்களை உருவாக்குதல். |
| | |
| **வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள்** | தெரணியகல, நாய கங்கை சிறிய நீர் மின் நிலையத்தை நிர்மாணிப்பதனால் சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கம் சம்பந்தமாக மேலும் ஆய்வு செய்து பொருத்தமான தீர்வொன்றைப் பிரேரித்தல். |
| | |
| **தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்** | வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக நன்கொடையாளர்களுக்கான மாநாடொன்றை திட்டமிடல் |
| | ராஜகிரியவில் அமைந்துள்ள கோல்டன் கீ காது, மூக்கு, தொண்டை வைத்தியசாலையை விற்றல் |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியைப் பயன்படுத்தி மாகாண சபைக்குரிய பாதைகளை புனரமைத்தல். |
| | உத்தேச **2016-2020** பொது முதலீட்டு வேலைத் திட்டம் சம்பந்தமாக கொள்கையளவிலான கட்டளைகளைப் பிறப்பித்தல் |
| | உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக வேறு பாரம்பரிய முறைகளுடன் பெறுகை நடவடிக்கைகளின்போது 'சுவிஸ் சவால்' முறையையும் இலங்கையில் பின்பற்றுதல் |
| | அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகங்களின் வங்கி நடவடிக்கைகளை தடைகளின்றி நிறைவேற்றுவதனை உறதிப்படுத்துவதற்காக வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமென தாம் கருதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எந்தவொரு வங்கியையும் தேர்ந்தெடுப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குதல். |
| | |
| **அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி** | ஸ்ரீ லங்கன் விமான சேவையை மறுசீரமைத்தல் சம்பந்தமாக கொள்கை ரீதியிலான கட்டளைகளைப் பிறப்பித்தல |
| | குறை செயலாற்றுகையைக் கொண்ட மற்றும் /அல்லது உரிமையாளர்களால் கைவிடப்பட்ட தொழில் முயற்சிகளை சுவீகரித்துக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதலை ஆய்வு செய்தல் மற்றும் மீளாய்வுக் குழுவொன்றை நியமித்தல்(குறை செயலாற்றுகை வர்த்தகங்கள் சட்டம்) |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள |
|---|---|
| **அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி** | ஜனவசம/இ.அ.பெ.கூ/எல்கடுவ பிளான்டேஷன்ஸ் போன்ற நிறுவனங்களை மீளமைப்பதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள செயன்முறையை கொள்கையளவில் அங்கீகரித்தல் |
| | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தாபிப்பதற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத் துறை மீளமைப்புப் பிரிவை செயற்படுத்துவதறகாக செயற் குழுவொன்றை நியமித்தல் |
| | வொக்ஷோல் வீதியில் இல:175 எனும் இடத்தில் மற்றும் நாவலப்பிட்டிய போஹில் தோட்டத்தின் காணிகளுடன் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக கொள்கையளவிலான வழிகாட்டலை வழங்குதல். |
| | அரச தொழில் முயற்சிகள் சபையை நியமிப்பதனை அங்கீகரித்தல் |
| | |
| **மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி** | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான திட்டத்தை விளக்குவதற்காக ஐகுஊநிறுவனத்தை இன் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் அதற்காக 400,000 அ.டொலர்களை முற்பணமாகச் செலுத்துதல். |
| | கழிவகற்றும் இயந்திர சாலையை அமைப்பதற்காக வெஸ்டர்ன் பவர் கம்பனிக்கு காணித் துண்டொன்றைப் பெற்றுக் கொடுத்தல் |
| | பெரு நகரத் திட்டம் சம்பந்தமாக கொள்கை ரீதியலான கட்டளைகளைப் பிறப்பித்தல் |
| | பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள போக்குவரத்துப் பிரிவு முதண்மைத் திட்டத்திற்காக கொள்கையளவிலான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் |
| | கொழும்பு நகரின் ஒன்றிணைந்த போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்திற்காக முகவர் நிறுவனங்களுக்கிடையிலான செயலணியை தாபித்தல் |
| | கழிவுகளை அகற்றும் திட்டத்தை தேர்ந்தெடுப்பதற்காக ஐகுஊநிறுவனத்தை இணைத்துக் கொள்வதற்கான ஆரம்ப தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சினால் முன்மொழியப்பட்டுள்ள உள்நாட்டு நிபுணர்களின் உதவியுடன் பொருத்தமான கழிவகற்றும் திட்டமொன்றை தேர்ந்தெடுப்பதற்காக குழுவொன்றை நியமித்தல். |
| | |
| **பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி** | தார் (bitumen) சுங்கக் கிடங்கொன்றை (bonded warehouse) அமைப்பதற்காக அமைச்சரவைக்கு சிபாரிசு செய்தல் |
| | உள்ளூர் சந்தைக்கு தார் (டிவைரஅநெ) வழங்குவதற்காக அமைச்சரவைக்கு சிபாரிசு செய்தல் |
| | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்கு 256.15 மில்லியன் ரூபா நிதியை அங்கீகரித்தல் |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியிடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள |
|---|---|
| **நீதியமைச்சு** | கொழும்பு, புதிய நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வ.ப. பீ.சீ.சீ லங்கா கம்பனிக்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியை சுவீகரித்துக் கொள்ளல் |
| | சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியதும் இதுவரை பெற்றுத்தரப்படாத சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதனைத் துரிதப்படுத்துவதற்கான அறிவுரை வழங்குதல். |
| | |
| **மீன் பிடி மற்றும் நீரியல் வளங்கள்** | ஐரோப்பா சங்கத்தின் இலங்கை மீனுக்கான தடை சம்பந்தமாக மீன் பிடி அதிகாரச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களுடன் தொடர்பான அலுவல்களை துரிதமாக நிறைவு செய்தல். |
| | ஐரோப்பிய சங்கத்தின் மீனுக்கான தடையுடன் தொடர்பான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 80 பட்டதாரிகளை நேரடியாக மீன் பிடித் துறை அமைச்சுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல். |
| | |
| **தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உடகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு** | உள்ளூர் ரூபவாஹினி அலைவரிசைகளை டிஜிட்டல் மயப்படுத்துவது சம்பந்தமாக கொள்கை ரீதியிலான கட்டளைகளைப் பிறப்பித்தல் |
| | மொபிடெல் நிறுவனத்தினால் ஹட்ச் நிறுவனத்தை பெற்றுக்கொள்ளும் பிரேரணை சம்பந்தமாக பெறுகைகள் குழுவொன்று மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்தல் |
| | |
| **சுற்றாடல்** | வெளிநாட்டு கம்பனியொன்றின் அதிகாரம் பெற்ற கம்பனியாக உறுதிப்படுத்த முடியுமானால் உள்நாட்டு சில இரத்தினக் கல் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்தல் |
| | இரத்தினக் கல் கைத்தொழில் முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை சிபாரிசு செய்வதற்காக குழுவொன்றை நியமித்தல் |
| | |
| **உள்நாட்டலுவல்கள்** | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதைகள் தவிர்ந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்படும் பாதைகள் செயற் திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களை துரிதப்படுத்தல் |
| | நிறைவு செய்யப்படாத மாகாண சபை செயற் திட்டங்களின் மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு அதிகாரியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் செயற் பணிகளை துரிதப்படுத்துவதற்கு மற்றும் செலுத்துகைகளை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரத்தை மாவட்ட செயலாளர்களுக்கு ஒப்படைத்தல். |

| பிரிவு /உரிய அமைச்சு | எடுக்கப்பட்ட தீர்மானங்கள் /வெளியீடப்பட்ட கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள |
|---|---|
| **வீடமைப்பு மற்றும் நிர்மாணங்கள்** | பம்பலப்பிட்டி தொடர் மாடி வீட்டுத் திட்டத்தின் அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதனை கொள்கை ரீதியாக அங்கீகரித்தல் |
| | நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீட்டுத் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித வேலைத் திட்டத்தை அங்கீகரிப்பதனை அமைச்சரவைக்கு சிபாரிசு செய்தல் |
| | |
| **கல்வி** | 2016 ஆண்டிற்காக பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்குவது தொடர்பாக கொள்கை ரீதியிலான கட்டளைகளை பிறப்பித்தல் |
| | |
| **சமூக அபிவிருத்தி மற்றும் நலனோம்புகை** | நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் காணப்படும் மேலதிக நெல்லைப் பயன்படுத்தி சமுர்தி உதவி பெறுவோருக்கு அரிசியை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தல் |
| | |
| **சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு** | அம்பாந்தோட்டைக்காக கூட்டு அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரித்தல் |
| | |
| **கிராமிய பொருளாதார அலுவல்கள்** | **2015-** பெரும் போகத்தின்போது நெல் கொள்வனவு சம்பந்தமாக கொள்கை ரீதியிலான கட்டளைகளைப் பிறப்பித்தல் |
| | தம்வசமுள்ள நெல்லை நெல் சந்தைப்படுத்தம் சபைக்கு விற்பனை செய்வதற்காக இணையத்தளத்தில் பதிவு செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல். |
| | **2015-** பெரும் போகத்தின்போது நெல் கொள்வனவு சம்பந்தமாக கொள்கை ரீதியிலான கட்டளைகளைப் பிறப்பித்தல் |
| | |
| **சுற்றுலாத்துறை** | இணங்கிய பிரகாரம் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பது சம்பந்தமாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி சபையினால் முறையான கணக்காய்வினை மேற்கொண்டு 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட உலகளாவிய பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக சர்வதேச ஊடக நிறுவனங்களுக்கான செலுத்துகைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல். |
| | |
| **விவசாயம்** | திறந்த சந்தைப் போட்டித் தன்மையை ஏற்படுத்துமுகமாக நெல்லுக்கான உரம் வழங்குதலை தனியார் துறைக்கும் திறந்துவிடல் |
| | விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பயிரினங்களை அதாவது, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காளம்,சோளம், சோயா போஞ்சி மற்றும் மிளகாயை இலக்காகக் கொண்ட வர்த்தக ரீதியிலமைந்த விவசாய அபிவிருத்திக்கான பிரேரணையொன்றை அங்கீகரித்துக் கொள்ளல். |

### 3.2 பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அதிகாரிகள் குழு

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவுக்கு பொருளாதாரா முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக பிரதம அமைச்சரால் 2015.10.09 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் சம்பந்தமான அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இலங்கையின் மொத்த பொருளாதாரத்திற்கும் கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களை வழங்கும் முக்கிய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**அலுவல்கள்**

I. பொருளாதார அலுவல்கள், அரச நிதிக் கொள்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்பான அமைச்சரவை நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்து அது தொடர்பான சிபாரிசுகளை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பித்தல்

II. தனியார் துறை முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் பல்வேறு செயற்திட்ட அறிக்கைகளுக்கான பொருத்தமான கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்

III. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அதிகாரிகள் குழுவிடம் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் கவனத்தை ஈர்க்கச் செய்தல்

IV. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அதிகாரிகள் குழு மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்

**குழுவில் அடங்குவோர்**

1. திரு. ஆர்.பாஸ்கரலிங்கம் - சிரேஷ்ட ஆலோசகர் , தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு. (தலைவர்)
2. திரு. சரித்த ரத்வத்தே - பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர்
3. திரு. சுமித் அபேசிங்க - அமைச்சரவையின் செயலாளர்
4. கலாநிதி திரு. ஆர் எச் எஸ் சமரதுங்க - செயலாளர், நிதியமைச்சு.
5. திரு. எம் ஐ எம் ரபீக் - செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
6. திரு. என் சீ எல் ரொட்ரிகோ - மேலதிக செயலாளர், பிரதம அமைச்சர் அலுவலகம்

2015.12.31 திகதியன்று இந்தக் குழுவின் 08 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினால் மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விடயங்களை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக. குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் ஏனைய 75 கோரிக்கைகளுக்கு இந்தக் குழுவினால் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.3 கொள்கைகள் உருவாக்கல் அலுவலகத்தை தாபித்தல்

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்கினை துரிதமாக அடைந்து கொள்வதன் நிமித்தம் தெளிவான ஏற்றுக்கொள்ள முடியுமான மற்றும் நியாயமான கொள்கைகளை உருவாக்குவதற்காக கொள்கை திட்டமிடல் பிரிவொன்று பிரதம அமைச்சர் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்தின் அலுவல்களை துரிதப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் இந்த கொள்கை உருவாக்கல் அலுவலகத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தேசிய கொள்கைகளை திட்டமிடல் மற்றும் உருவாக்குதல்
2. தேசிய கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல்.
3. அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தயாரித்தல்
4. கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அலுவலை ஒருங்கிணைத்தல்
5. கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
6. இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளின் மீது வெளிவாரியான காரணிகள்ஏற்படுத்தும் தாக்கத்தை மீளாய்வுக்குட்படுத்தல்.

இந்த அலுவலகத்தினால் சுகாதாரம், காணிகளை சுவீகரித்தல், தகவல் தொழில்நுட்பம், முதியோர் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு, நுண்பாக நிதியியல், விவசாயம் போன்ற பல துறைகள் சம்பந்தமாக கொள்கைகள் தொடர்பாக தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 3.4 கொள்கை உருவாக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுக்கள்

### 3.4.1 முதலீடுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் வரிகள் பற்றிய ஆய்வுக் குழு

பிரதம அமைச்சரின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் சம்பந்தமான சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையிலான முதலீட்டுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், கட்டணங்கள் மற்றும் வரிகள் சம்பந்தமான ஆய்வுக் குழுவொன்றை பிரதமர் அவர்கள் 2015.06.04 ஆம் திகதி நியமித்தார். திரு. சரித்த ரத்வத்தே(பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர்), திரு.அர்ஜுன மகேந்திரன்(மத்திய வங்கி ஆளுநர்), திரு.ஏ.கே. செனவிரத்ன(பணிப்பாளர் நாயகம்-அரச நிதித் திணைக்களம்), திருமதி சொனாலி விஜேரத்ன(பணிப்பாளர் நாயகம் - வாணிபத் திணைக்களம்), திரு.ரன்ஜித் அசோக்க(பணிப்பாளர் நாயகம் - வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்), திருமதி சம்பிக்கா மலல்கொட(பணிப்பாளர், முதலீட்டு சபை), பேராசிரியர் ரொஹான் சமரஜீவ(ஆரம்ப காலத் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி - Lirne Asia), திரு.ஹேன்ஸ் விஜேசூரிய ( பிரதம நிறைவேற்று அதிகாரி - டயலொக் எக்சியாட்டா தனியார் கம்பனி), திரு. முர்டாசா ஜெபர்ஜி (பிரதம நிறைவேற்று அதிகாரி - ஜே.பி.சிகியுரிட்டி தனியார் கம்பனி) ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாவர்.

முதலீட்டுக்கான ஈர்ப்பை ஏற்படுத்தல் மற்றும் நாட்டின் முதலீட்டுக்கான சுற்றுச் சூழலை மேம்படுத்துவதுடன் தொடர்பான பிரச்சினைகளைப் போன்றே முதலீட்டுக்கான சுற்றுச் சூழலை மேம்படுத்துவதற்கான உபாய வழிமுறைகளை அறிந்து கொள்ளல் இந்த ஆய்வுக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

குழுவினால் சில சந்தர்ப்பங்களில் முதலீட்டை ஈர்த்துக் கொள்ளல் மற்றும் நாட்டின் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, முதலீட்டுக்கான சூழலுடன் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக கவனத்தை ஈர்க்கும் “முதலீட்டு இடைவெளியை நிரப்புதல்” சம்பந்தமான அறிக்கையை முதலீட்டு சபையின் ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைத் திணைக்களத்தின் ஊடாக தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை தொடர்பாக குழு அங்கத்தவர்களின் முடிவுரைகள் மற்றும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டு சபையானது கொள்கைப் பத்திரமொன்றை தயாரித்து பிரதமரின் அவதானிப்புக்காக சமர்ப்பித்துள்ளது.

### 3.4.2 தேசிய ஓய்வூதிய அலுவலகம் மற்றும் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவை அமைத்தல் பற்றிய ஆய்வுக் குழு

நாட்டில் நிலவும் சமூகப் பாதுகாப்பு அனுகூலத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கு மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கு பிரதமரின் செயலாளர் ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க அவர்களின் தலைமையில் பலதுறை நிபுணர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவொன்றை பிரதமர் நியமித்தள்ளார். இது சம்பந்தமாக ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் மலேசியா பொன்ற நாடுகளின் ஓய்வூதியத் திட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படும். இந்த ஆய்வின் நோக்கம், நிலவும் சமூக பாதுகாப்புத் திட்டங்களை ஒன்றிணைத்து அவற்றின் நிர்வாக நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கும், மொத்த செலவினத்தின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக தேசிய ஓய்வூதிய அலுவலகம் ( NPO) மற்றும் தேசிய ஓய்வூதிய ஆலோசனைக் குழுவொன்றை அமைத்தல் என்பனவாகும்.

புதிய ஓய்வூதிய அலுவலகம் மற்றும் தேசிய ஓய்வூதிய ஆலோசனைக் குழுவொன்றை அமைப்பதற்காக தற்போது கொள்கைப் பத்திரத்தின் வரைவு (Draft Concept Notes) தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வசதிகளை வழங்குவதற்காக உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு இணக்கம் தெரிவித்துள்ளதுடன் நாட்டில் காணப்படும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் சமூக நலனோம்புகை திட்டங்கள் சம்பந்தமாக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.ஊழியர் சேலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களின் பயன்கள் சம்பந்தமான சுருக்கமான கொள்கைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய, ஊழியர் சேமலாப நியதியத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் விளைவுத்திறன், வினைத்திறன் மற்றும் நிலையான இருப்பை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இரு மடங்காவதனை தவிர்ப்பதற்காக ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள் தர்க்கரீதியான திட்டங்களின் கீழ் அனுகூலங்களை(பயனை) அதிகரித்து தகைமை பெறும் அனைத்து ஊழியர்களும் உள்ளடக்கப்படும் வகையில் மற்றும் சிறப்பான நிதி முகாமைத்துவத்திற்கான திட்டங்களை விரிவு படுத்தி நாட்டில் நிலவும் சகல சமூக பாதுகாப்பு அனுகூலத் திட்டங்கள் தொடர்பாகவும் நிர்மாணிக்கப்படும் முகாமைத்துவ தகவல் தொகுதியொன்றை (Management Information System) தாபிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.4.3 நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு

**“60 மாதங்களில் புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்பும் ஐந்து அம்சத் திட்டத்தின்” பிரகாரம்** நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு 5 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் கௌரவ அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு. ஆர் பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையில் மற்றும் கௌரவ பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு.சரித்த ரத்வத்தே மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட ஆய்வுக் குழுவொன்றை பிரதமர் நியமித்துள்ளார்.

அரச துறை மற்றும் தனியார் துறை ஒன்றிணைந்த வேலைத் திட்டமொன்றாக (Public Private Partnership) செயற்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் 04 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வேலைத் திட்டத்தற்காக பொது போக்குவரத்து வசதிகளைக் கொண்ட காணிகளை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், வீட்டிற்கான திட்டவரைபை தயாரித்தல் போன்ற பங்களிப்புக்களை வழங்குவதுடன் வீடமைப்பு நிறுவனங்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் வீடுகள் அமைக்கப்படும். அவ்வாறே, வீடுகளுக்கான விலைகளும் அரசாங்கத்தினாலேயே தீர்மானிக்கப்படும்.

இது தவிர பயனாளிகளுக்கு வீடுகளை கொள்வனவு செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக சலுகை வட்டியில் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை, அந்த 04 வீடமைப்புத் திட்டங்களுக்குப் பொருத்தமான காணிகள் அறிந்துகொள்ளப்பட்டுள்ளதுடன், பொருத்தமான வீடமைப்பு நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கேள்வி நடைமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 3.4.4 விளையாட்டுத் துறை சட்டம் பற்றிய ஆய்வுக் குழு

தனது தேர்தல் பிரகடனத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டதற்கமைய தேர்தலின் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசாங்கம் இலங்கை தேசிய விளையாட்டுத்துறை அபிவிருத்தி அதிகார சபையை தாபிப்பதற்காக தற்போது தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு, அதற்கான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இந்த எண்ணக் கருவை நடைமுறைப்படுத்துவதற்காக அதற்குப் பொருத்தமான நிறுவனம் மற்றும் குழுவொன்றை விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார். இந்த அலுவலின்போது நிலவும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான காரணங்கள் சம்பந்தமாக அறிந்து கொள்வதற்கு மற்றம் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்குத் தேவையான உபாய வழிமுறைகள் மற்றும் பொறிமுறையை அறிந்து கொள்வதற்கு விளையாட்டுத்துறை சம்பந்தமாக விபரமான வகையில் மீளாய்வை மேற்கொள்வது அவசியமாகும்.

இங்கு தேசிய விளையாட்டுச் சங்கங்களை நடாத்தும்போது மற்றும் அந்த சங்கங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது அரசியல் தலையீடு இன்றி நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டம் விளையாட்டுத் துறை தொடர்பிலும் அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்யப்படல் வேண்டுமென சர்வதேச ஒலிம்பிக் குழு போன்ற சர்வதேச விளையாட்டுத் துறைசார் நிறுவனங்கள் கூறிய கருத்துக்களை குழு கவனத்திற் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கத்தினால் வருடாந்தம் நாட்டின் விளையாட்டுத் துறைசார் நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுத் துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் விளையாட்டுத்துறை அமைச்சர் பொறுப்புக்கூறும் கணிசமான அளவு நிதி ஒதுக்கப்படுவதாகவும் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட தரப்பினரின் தேவைகளை நிறைவேற்றும்போது முடியுமான மிகச் சிறந்த முறையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான முறையொன்றை உருவாக்குவதற்கு குழு எதிர்பார்க்கின்றது.

நாட்டின் அனைவருக்கும் விளையாட்டுக்களில் இலகுவாக கலந்து கொள்வதற்கு முடியமாக இருப்பதுடன் அரசியல் தலையீடுகள் இன்றி பலமான நிறுவனக் கட்டமைப்பை தயாரிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் விளையாட்டுத் துறை முகாமைத்துவம் முகங்கொடுக்கும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கையில் விளையாட்டுத்துறை மீது தாக்கம் செலுத்தும் நாட்டின் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமாயின் அதனை இலங்கை அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவலின் நோக்கமாகும்.

குறுகிய கால அடிப்படையில் விளையாட்டுத் துறையில் இருக்கும் தற்போதைய தரப்பினர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அந்தத் துறையில் நிலவும் பலவீனங்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவற்றை

இல்லாதொழிப்பதற்காக நடைமுறைப்படுத்த முடியுமான முறைகள் சம்பந்தமாக கவனத்திற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் முடியுமாக இருக்கும். இது தொடர்பாக தேசிய விளையாட்டுத்துறை நிறுவனம் உட்பட பல்வேறு விளையாட்டுத் துறைசார் நிறுவனங்களின் பங்கு, பொறுப்பைப் போன்றே அவற்றின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை தெளிவுபடுத்திக் கொள்வது விளையாட்டுத் துறையின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கு அத்தியாவசியமாகின்றது.

நீண்ட கால அடிப்படையில் நாட்டின் விளையாட்டுத்துறை வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சர்வதேச ரீதியாக விளையாட்டுத் துறையில் திறமைகளைக் காட்டும் உயர்ந்த ஆற்றல்களைக் கொண்ட விளையாட்டுக் குழுக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களை உருவாக்குவதன் ஊடாக பயிற்சி பெற்ற மனித வளம் உட்பட நாட்டின் விளையாட்டுத் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு மற்றும் அதிகரிப்பதற்கு ஒப்படைக்கப்பட்ட இந்த அலுவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆய்வுக் குழுவுக்கான அங்கத்தவர்கள் 2015.11.05 ஆம் திகதி மீண்டும் நியமிக்கப்பட்டதுடன், கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் குழுவின் அங்கத்தவர்களாகச் செயற்படுவார்கள்

1. திரு.ஜகத் பெர்னாந்து, சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர், வரையறுக்கப்பட்ட ஜாகோ கம்பனி - தலைவர்
2. திரு.பாலித்த குமாரசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி - அங்கத்தவர்
3. திரு.கே.டீ.எஸ்.ருவன் சந்திர, பணிப்பாளர் நாயகம், விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் - அங்கத்தவர்
4. திரு.ஹர்ஷ அமரசேக்கர, ஜனாதிபதி சட்டத்தரணி - அங்கத்தவர்
5. திரு மனோஜ் பண்டார - அங்கத்தவர்
6. திரு.ஜயான்திஸ்ஸ ரத்வத்தே, பணிப்பாளர் - சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் கைத்தொழிற்சாலைகள் பீ.எல்.சீ. கம்பனி - அங்கத்தவர்
7. திரு. ஹேமசிரி பெர்னாந்து, தலைவர், தேசிய ஒலிம்பிக் கமிட்டி - அங்கத்தவர்
8. திரு.தீப்தி லமாஹேவா, கௌரவ விளையாட்டுத் துறை அமைச்சரின் ஆலோசகர் - அங்கத்தவர்

கொள்கைப் பத்திரத்தின் வரைவு பிரதம அமைச்சரின் அவதானிப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.4.5 பாராளுமன்ற நிர்வாகம் பற்றிய ஆய்வுக் குழு

பிரதம அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2015.12.09 ஆம் திகதி கீழ் குறிப்பிடப்படும் 16 பிரிவுகளுக்காக பாராளுமன்ற கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டது.

1. பொருளாதார அபிவிருத்தி
2. சர்வதேச ஒத்துழைப்பு
3. தேசிய பாதுகாப்பு
4. நிலைபேறான அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்
5. மகளிர் விவகாரம்
6. கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி
7. சுகாதாரம், மானிட நலனோம்புகை மற்றும் சமூக வலுவூட்டல்
8. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்
9. விவசாயம் மற்றும் காணி
10. சட்ட அலுவல்கள் மற்றும் ஊடகம்
11. இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, கலை மற்றும் தேசிய உரிமங்கள்
12. வர்த்தகம் மற்றும் வாணிபம்
13. சக்தி வளங்கள்
14. உற்பத்திகள் மற்றும் சேவைகள்
15. உள்ளக நிர்வாகம் மற்றும் அரச முகாமைத்துவம்
16. நல்லிணக்கம் மற்றும் வடக்கு, கிழக்கை மீண்டும் கட்டியெழுப்புதல்

### 3.4.6 அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்கள் கருத்தறியும் குழு

2015.12.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக வழக்கறிஞர் லால் விஜேநாயக்க அவர்களின் தலைமையில் வழக்கறிஞர் பாயிஸ் முஸ்தபா, பேராசிரியர் காமினி சமரநாயக்க, பேராசிரியர், பேராசிரியர் ஏ எம் நவரத்ன பண்டார மற்றும் பேராசிரியர் என் செல்வகுமாரன் உட்பட்ட 20 பல்துறை நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொழில் நிபுணர்கள், சிவில் சமூகத்தினர், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் உட்பட அனைத்து தரப்பினரதும் வாய் மூலமான மற்றும் எழுத்து மூலமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இக் குழுவின் இறுதி அறிக்கையை 2016.05.10 ஆம் திகதியன்று பிரதம அமைச்சரிடம் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.4.7 ஐரோப்பிய சங்கத்தின் மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்குவதற்கான செயற்பாட்டுக் குழு

சட்ட விரோதமான, முறையற்ற மீன் பிடி நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு கவனத்தை செலுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியமை காரணமாக இலங்கை மீன் ஏற்றுமதியைத் தடை செய்வதற்கு 2014 ஒக்டோபர் மாதம் ஐரோப்பிய ஆணைக் குழுவினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இந்தத் தடை 2015 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஐரோப்பிய சங்கத்திற்கு புதிய மற்றும் குளிரூட்டப்பட்ட 'தளப்பத்' மற்றும் சூரை போன்ற மீன் வகைகளை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பாரிய ஏற்றுமதியாளராக இலங்கை விளங்கியது. அதற்கமைய, 2013 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 74 மில்லியன் ஸ்டர்லிங் பவுன்களாகும். மேற்குறிப்பிடப்பட்ட தடை காரணமாக சுமார் 100 மில்லியன் அ.டொலர் சந்தையை இலங்கை இழந்துள்ளது.

இந்தப் பின்னணியில் ஐரோப்பிய சங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த மீன் பிடி ஒழுங்கு விதிகளின் கீழ் ஒத்துழைப்பு வழங்காத நாடுகள் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்கிக் கொள்வது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்காக பிரதம அமைச்சரால் செயற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக் குழுவானது மீன் பிடித்துறை அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, வர்த்தகத் திணைக்களம், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் கடலுணவுகள் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளைக் கொண்டமைந்துள்ளது.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் சமுத்திர நடவடிக்கைகள் சம்பந்தமான பணிப்பாளர் நாயகம், தடையை நீக்குவதற்காக இலங்கை நிறைவேற்ற வேண்டிய விடயங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்தேர்ச்சியாக அவதானித்து வந்ததுடன், இறுதியில் முகாமைத்துவ செயற்பாட்டு நடவடிக்கைகள் உண்மையிலேயே நிறைவேற்றப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்துகொள்ளுமுகமாக 2015 நவம்பர் மாதத்தில் இங்கு தூதுக் குழுவொன்றை அனுப்பினார்.

இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிக்கொள்வது சம்பந்தமாக ஐரோப்பிய சங்கத்தின் இறுதித் தீர்மானம் 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன்னர் கிடைக்கப்பெறும் என்பது இலங்கை அரசாங்கத்தின் நம்பிக்கையாகும். அப்போது இலங்கை கடல் உணவுகளை ஐரோப்பிய சங்கத்தினைச் சேர்ந்த நாடுகளுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

### 3.4.8 அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான சட்டத்தை வரையும் குழு

அரச நிதி முகாமைத்துவத்துடன் தொடர்பான சட்டத்தை வரைவதற்காக பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு. சரித்த ரத்வத்தே, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பத்தி விக்ரமரத்ன மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி திரு. ஆர் எச் எஸ் சமரதுங்க ஆகியோர் உட்பட 09 பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், இந்தக் குழுவின் பிரதான நோக்கம், நிதியமைச்சினால் வரையப்பட்டுள்ள புதிய நிதிப் பிரமாணக் கோவையை ஆராய்வு செய்தல், அரச நிதி முகாமைத்துவத்திற்காக நிலவும் சட்ட வரையறையை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் அரச நிதி முகாமைத்துவத்துடன் தொடர்பான சட்டங்களை வரைவதாகும்.

விசேடமாக, ஏனைய தரப்பினருடன் செயலமர்வொன்றை நடாத்தி அவர்களது கருத்துக்களையும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதுடன், 2016 ஜுன் மாத இறுதியாகும்போது சகல வரைவுகளையும் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.4.9 கொழும்பு கலாசார மையத்தை தாபித்தல் சம்பந்தமாக சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுக்கும் குழு

உத்தேச கொழும்பு கலாசார மையம் சம்பந்தமாக சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சரினால் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. திரு மனோ சண்முகம் அவர்களின் தலைமை வகிக்கும் இக் குழுவில் பேராசிரியர் திரு.சரத் அமுனுகம, திரு. சந்திரகுப்த தேனுவர, திருமதி சென்ட்ரீ டேவிட் ரொட்ரிகோ மற்றும் லயனல் பெர்னாந்து ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாவார்கள். இதன் அடிப்படை நோக்கம்,''கொழும்பு கலாசார மையம்'' தாபிக்கப்படுவதன் ஊடாக தெற்காசியாவில் கட்புலன்(காட்சி) மற்றும் அரங்கேற்றக் கலைக்கான மையத்தை நிர்மாணிப்பதாகும்.

இக் குழுவினால் நெலும் பொக்குண(தாமரைத் தடாகம்), ஜோன் த சில்வா அரங்கு, எல்பின்ஸ்டன் மற்றும் புதிய அரங்கு போன்ற நாட்டின் முன்னணி அரங்கேற்ற அரங்குகளில் தமது கலைத் திறமைகளை வெளிக்காட்டும் சர்வதேச தரத்திலான கலைஞர்களுக்கு அவர்களது திறமைகளை மென்மேலும் வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவற்றின் தரத்தை உயர்த்துவது சம்பந்தமாக கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்கத்தைய, கீழைத்தேய இசைக் குழுக்கள் மற்றும் தேசிய நடனக் கம்பனி இந்த மையத்தினால் கண்காணிப்புக்குட்படும்.

''ஆசிய பசுபிக் **Choir Games - 2017** '' போட்டியை ஏற்பாடு செய்வதற்கு இக் குழு எதிர்பார்ப்பதுடன், இது இலங்கை சுற்றுலாத்துறைக் கைத்தொழில் அபிவிருத்திக்கு துணை புரியும்.

# 4. தேசிய நல்லிணக்கம், சமூக சேவைகள் மற்றும் மத அலுவல்கள்

## 4.1 தேசிய நல்லிணக்கம்

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும், இலங்கையர்களுக்கு உண்மையான நல்லிணக்கத்தை இதுவரை எட்ட முடியவில்லை. எனவே, இலங்கையின் சகல மத மற்றும் இனக் குழுக்களுடனும் கலந்துரையாடி தேசிய சட்ட வரையறைக்குள் பொறிமுறையொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சகல இனத்தவர்களுக்கும் நியாயமான வகையில் வாழ முடியுமான நீதியான சமூகமொன்றினைத் தோற்றுவிப்பதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை விருத்தி செய்வதற்காக சகல மதங்களினதும் ஒரு வைபவத்தை தேசிய வைபவமாக பிரதமரின் தலைமையில் கொண்டாடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.1 பிரதமரின் வட மாகாண விஜயம்




பிரதமர் அவர்கள் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 – 29 ஆம் திகதிகளில் வட மாகாணத்தில் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயமானது வடக்கு மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கையர்களுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாக அமைந்தது. இந்த விஜயத்தின்போது பல முக்கிய துறைகள் சம்பந்தமாக விடயங்களை ஆராய்ந்த பிரதம அமைச்சர் அவர்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

வட மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மற்றும் வட மாகாண அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கான உத்தேச வேலைத் திட்டங்கள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக, பொருளாதார நிலைமையினை உயர்த்துவதற்காக அவ்வாறான குடும்பங்களுக்கான தேசிய நிலையமொன்றை கிளிநொச்சியில் அமைத்தல்
- வட மாகாணத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமித்தல்.
- இராணுவத்தினால் வழங்கப்படவிருக்கும் காணிகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் மீள் குடியேற்றம் சம்பந்தமான விபரமான திட்டமொன்றை சமர்ப்பித்தல்
- இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டிருக்கும் சிவிலியன்களுக்குச் சொந்தமான காணிகளை அவற்றின் உரிமை சம்பந்தமாக உறுதிப்படுத்தியதன் பின்னர் உரிமையாளருக்கு காணி உரிமையைப் பெற்றுக் கொடுத்தல்
- இந்திய வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஆய்வுக் குழுவொன்றை நியமித்தல்
- இரணைத் தீவு மக்களை மீள் குடியேற்றுவதற்கான வாய்ப்புக்கள் சம்பந்தமாக கண்டறியும் பொறுப்பை கடற்படையிடம் ஒப்படைத்தல்
- காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தல்
- காடுகளாக கருதப்படும் பிரதேசங்களில் மீள் குடியேற்றல்
- ஐக்கச்சியில் மீள் குடியயேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அமைச்சரவை நிருபத்தை முன்வைத்தல்
- வட மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் சம்பந்தமாக விபரமான அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமித்தல்
- சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக செலுத்துகைகள் மேற்கொள்ளப்படும் ஆசிரியர்களின் சேவை தொடர்பான சாதகமான பிரேரணைகளை முன்வைத்தல்
- வவுனியா காமினி மகா வித்தியாலயத்தின் தற்போதைய நிலைமை சம்பந்தமான விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பித்தல்
- மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள சகல பாடசாலைகளிலும் கூடைப்பந்து விளையாட்டுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

- மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் 50%இனை பதிவழிப்பதற்கான பிரேரணைகளை முன்வைத்தல்
- இந்திய மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உயர் தரத்திலான மீன் வலைகளை அமைச்சு உறுதிப்படுத்தி மீனவர்களிடையே பகிர்ந்தளித்தல்
- சட்ட விரோதமான முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல்
- உயர் பாதுகாப்பு வலயங்களில் மற்றும் பாதிப்புக்குட்பட்ட மத ஸ்தலங்களை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்
- குடி நீர் பிரச்சினை சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடல் மற்றும் சமூக நீர்த் திட்டங்களுக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை கண்டறிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- பொலிஸ் நிலையங்களில் பெண்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய கவனத்தை ஈர்த்தல்
- அங்கவீனர்கள் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்றை நியமித்தல்
- அங்கவீனர்களுக்கான சேவைகளை வழங்குவதற்காக கிளிநொச்சியில் பிரதேச மத்திய நிலையமொன்றை தாபித்தல்
- வர்த்தகர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பித்தல்
- இரனைமடு குளம் உட்பட வட மாகாணத்தில் அமைந்துள்ள குளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமித்தல்
- 2016 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்குத் தீர்மானித்தல் மற்றும் விளையாட்டு மைதானங்களை புனரமைப்பதனை துரிதப்படுத்துவதற்காக குழுவொன்றை நியமித்தல்
- முதலாவது பிரதேச இளைஞர் மையத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்தல்
- இலவசமாக **Wi-Fi** வசதிகளை வழங்கும் நடவடிக்கையின் கீழ் கொழும்புக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் **Wi-Fi** வலயங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- வட மாகாணத்தில் இருந்து 400 பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- நில மீட்பின் மூலம் பலாலியில் விமான ஓடுபாதையொன்றை அமைத்தல்
- வட மாகாண சபையின் கீழ் முன் பள்ளிகளை நடாத்துவதற்காக பொறிமுறையொன்றைத் தயாரித்தல்
- சட்ட விரோத மதுபானம் தொடர்பில் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தல்

- ஹாட்லி கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல், புதிய பஸ் வண்டியொன்றைப் பெற்றுக் கொடுத்தல், உடற்பயிற்சி நிலையமொன்றை பெற்றுக் கொடுத்தல்
- வட மாகாணத்தில் கைத்தொழில் வலயமொன்றை அமைத்தல்
- கிறிஸ்தவ சமயத்தைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்

## 4.2 சமூக நலனோம்புகைகள் மற்றும் மத அலுவல்கள்

### 4.2.1சமூக நலனோம்புகை

பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ், பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் கீழ் குறிப்பிடப்படும் சமூக நலனோம்புகை நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.2.1.1 புத்தாண்டு விழாவை நடாத்துதல்

பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் புத்தாண்டு விழா 2015.04.25 ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் களப் படைத் தலைமையகத்தில் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க அம்மையாரின் தலைமையில் நடைபெற்றது. இந்தப் புண்தாண்டு விழாவில் பிரதம அமைச்சர் அலுவலகப் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் உட்பட சுமார் 600 பேர் கலந்து கொண்டனர். அங்கத்தவர்களின் ஆற்றல்கள், பரஸ்பர நட்புறவு மற்றும் குழு உணர்வை விருத்தி செய்யும் நோக்கில் இங்கு பல்வேறு போட்டிகளும் நடாத்தப்பட்டன.

### 4.2.1.2 நேபாள பூமியதிர்ச்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியமை.

2015 ஏப்ரல் 25 ஆம் திகதி நேபாளத்தின் கத்மண்டு நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதியில் இடம்பெற்ற 7.8 ரிட்ச்சர் அளவு கொண்ட பூமியதிர்ச்சி காரணமாக பாதிக்கப்பட்ட நேபாள மக்களுக்கு உடனடியாக முடியுமானவரை நிவாரணங்களை வழங்குவதற்கு பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அன்றைய தினமே இரவு இலங்கை விமானப் படைக்குரிய பெரியளவிலான பொருட்கள் போக்குவரத்து விமானமான C 130 வகை மூலம் அத்தருணத்தில் நேபாள மக்களின் தேவையாக இருந்த குடி நீர், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் போன்றவற்றுடன் தொண்டர் நிவாரணப் பணிக குழுவொன்றும் நேபாளத்திற்கு அனுப்பப்பட்டது. பூமியர்ச்சி ஏற்பட்டவுடனேயே நேபாளத்தை நோக்கிச் சென்ற 3 நிவாரணக் குழுவுடன் சேர்ந்துகொள்வதற்கு இலங்கையின் இந்த நிவாரணப் பணிக் குழுவினால் முடிந்தது. நேபாளத்தில் இடம்பெயர்ந்த மாணவர்கள் மற்றும் யாத்திரிகர்கள் உட்பட் இலங்கையர்கள் 42 பேர் 2015.04.28 ஆம் திகதி மீண்டும் இந்த விமானத்தின் மூலம் இலங்கைக்கு அழைத்துக்கொள்ளப்பட்டனர்.

பிரதமரின் விசேட வேண்டுகோளுக்கு இணங்க நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்வந்த வைத்தியர்கள் குழு மற்றும் அத்தியாவசிய உதவிகள் தொடர்பாக முறையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைக்காக, விசேட கரும பீடமொன்று பிரதமரின் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டது. இதன் ஊடாக வெளி விவகார அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, மாவட்ட செயலகங்கள் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை உட்பட சகல நிவாரணப் பணிக் குழுக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு மருத்துவ வழங்கல்கள் மற்றும் ஆளணி உட்பட அத்தியாவசியப் பொருட்கள் நேபாளத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

2015.04.29 ஆம் திகதி ஸ்ரீலங்கன் விமான சேவைக்குரிய UL 4195 / UL 4196 கொண்ட விசேட பயணிகள் போக்குவரத்து விமானங்கள் ஊடாக இலங்கை இராணுவப் படையின் மேஜர் ஜெனரால் மைத்திரி டயஸ் அவர்களின் தலைமையிலான சிவில் வைத்திய ஆலோசகர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் காப்பாற்றும் மற்றும் நிவாரணப் பணி சம்பந்தமாக விசேட பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் 145 பேரைக் கொண்ட குழுவொன்று மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக நன்கொடையாக சேகரிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் நேபாளத்திற்கு அனுப்பப்பட்டது.

இந்த நிவாரண சேவைகளை வழங்குதல் மற்றும் எதிர் கால புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கண்டறிவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ஏ எச் எம் பௌசி அவர்கள் மற்றும் பிரதியமைச்சர் கௌரவ(வைத்தியர்) அனோமா கமகே அம்மையார் மற்றும் பிரதமரின் செயலாளர் ஈ எம் எஸ் பீ

ஏக்கநாயக்க உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் நேபாளத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர். அந்த விமானத்தின் மூலம் 21 இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அந்ா விமானத்தின் ஊடாக 2015.05.01 ஆம் திகதி மீண்டும் உலர் உணவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் நேபாளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இது தவிர அன்பளிப்பாக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 3,445,390.00 தொகை பூமியதிர்ச்சி காரணமாக பாதிப்புக்குட்பட்டிருந்த Swayambhu இல் அமைந்துள்ள ஆனந்தகுட்டி பௌத்த விஹாரை மற்றும் லலித்பூரில் அமைந்துள்ள RatoMachindranath இந்து கோயில் புனரமைப்புச் செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.










#### 4.2.1.3 இரத்த தான நிகழ்ச்சி

பிரதம அமைச்சர் அலுவலகம், தேசிய இரத்தம் ஏற்றல் சேவையுடன் ஒருங்கிணைந்து இரத்த தான நிகழ்ச்சித் திட்டமொன்று 2015.04.30 ஆம் திகதி பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. அங்கு பிரதம அமைச்சர் அலுவலக ஆளணியைச் சேர்ந்த சுமார் 100 பேர் இரத்த தான நிகழ்வில் கலந்து கொண்டனர்.

#### 4.2.1.4 மீரிகம முதியோர் இல்லத்தை புனரமைத்தல்

பிரதம அமைச்சர் அலுவலகம், மயுர அம்மான் நலனோம்புகை சங்கத்துடன் ஒருங்கிணைந்து சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் "செத்செவன" முதியோர் இல்லத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பெண்கள் முதியோர் விடுதி பூரணமாக புனரமைக்கப்பட்டதுடன், நிலத்திற்கு பரப்புதல், புதிய தலையணைகள், விரிப்புக்கள், மெத்தைகள் என்பவற்றை வழங்கும் நிகழ்வும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட விடுதி பிரதம அமைச்சரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அவர்களின் தலைமையில் 2016.05.07 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டதுடன், இதன்போது 100 பழக் கன்றுகளை நடும் நிகழ்வும் இடம்பெற்றது.









## 4.2.2 மத அலுவல்கள்

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் போன்ற பல்லினத்தவர்கள் மற்றும் மதத்தவர்களிடையே மத, இன ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்துமுகமாக மத நிகழ்ச்சிகளை தேசிய வைபவங்களாக நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.2.2.1 ஒன்பதாவது புத்த ரஷ்மி வெசாக் பண்டிகை

பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் கங்காராம விஹாரை இணைந்து ஏற்பாடு செய்த “புத்த ரஷ்மி” தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வுகள் 9 ஆவது தடவையாகவும் மிகச் வெற்றிகரமாக 2015 மே மாதம் 03,04,05 மற்றும் 06 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

கொழும்பு நகரில் நடாத்தப்படும் இந்த பிரதான தேசிய வைபவத்தின் நோக்கம் என்னவெனில், புத்தர் பெருமானின் புனித தாது காட்சிப்படுத்தப்படல், வெசக் கூடு கண்காட்சி, பாடசாலை மாணவர்களின் வெசாக்குடன் தொடர்பான ஆக்கங்கள், பக்திப் பாடல்கள், பௌத்த ஜாதகக் கதைகளின் அடிப்படையில் அரங்கேற்றப்படும் மேடை நாடகங்கள், வெசாக் பந்தல்கள், அன்ன தானம், பொம்மை கண்காட்சி மற்றும் பௌத்த நாடகக் கண்காட்சி ஊடாக பௌத்த கலாசாரத்தை மற்றும் உரிமைகளை எடுத்தியம்புவதாகும்.

இந்த வெசாக் வலயம் பேரே குளத்தின் சுறிறு வட்டப் பாதை மற்றும் பேரே குளத்தை அண்டிய பகுதிகள், கங்காராம விஹாரை, ஜினரத்தன மாவத்தை, முத்தையியா மாவத்தை, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, பெரஹரா மாவத்தை, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை மற்றும் நவம் மாவத்தை போன்ற இடங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது.






### 4.2.2.2 இப்தார் வைபவம்

அது மட்டுமன்றி முஸ்லிம்களின் கடமைகளில் ஒன்றான ரமழான் நோன்பு காலத்தில் நோன்பு திறக்கும் நிகழ்வான "இப்தார்" நிகழ்ச்சி மௌலவிமார்கள் மற்றும் சுமார் 1500 முஸ்லிம்களின் பங்கேற்புடன் 2015 ஜூன் மாதம் 29 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.









### 4.2.2.3 தீபாவளி வைபவம்

பிரதமர் அலுவலகம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய தீபாவளி வைபவம் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பிரதம அமைச்சரின் தலைமையில் அலரி மாளிகையில் கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் நோக்கம், இருளை நீக்கி ஒளியையும், தீமையை ஒழித்து நன்மையையும்யும் வரவழைப்பதாகும்.

இந்த வைபவத்தின்போது பூஜை நடாத்தப்பட்டதுடன் பாடசாலை மாணவர்கள் கலாசார நிகழ்ச்சிகளையும் முன்வைத்தனர்.









### 4.2.2.4 நத்தார் வைபவம்

நாட்டின் சகல பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அழைக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான பிள்ளைகளின் பங்கேற்புடன் கௌரவ ஜனாதிபதி, பிரதமர் அவர்கள் மற்றும் அவரது பாரியார் மற்றும் சில அமைச்சர்களின் தலைமையில் 2015.12.17 ஆம் திகதி அலரி மாளிகையில் நத்தார் வைபவம் நடைபெற்றது. இங்கு, வணக்க வழிபாடுகள் இடம்பெற்றதுடன், வருகை தந்திருந்த பாடசாலை மாணவர்களுக்காக நத்தார் கரோல், நத்தார் நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அந்தப் பிள்ளைகளுக்கு உணவு, பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.








## 5. பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

### 5.1 பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்

பல வருடங்களாக பொது மக்களுக்குத் தீர்த்துக்கொள்ள முடியாதிருந்த பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை தீர்க்கும் நோக்கில் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்படும் ஏராளமான கடிதங்கள் நாளாந்தம் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைத்தவண்ணமுள்ளன. இவ்வாறு கிடைக்கப்பெறும் பொது மக்கள் முறைப்பாடுகள் / குறைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பிரத்தியேகமான பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ள பொது மக்கள் முறைப்பாடுகள் ∴ குறைகளை கீழுள்ளவாறு வகைப்படுத்த முடியும்.

- காணிப் பிரச்சினைகள்
- வீட்டுப் பிரச்சினைகள்
- வழக்குத் தீர்ப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள்
- நிவாரணங்கள் / சீவனோபாய நட்டஈட்டுக் கோரிக்கைகள்
- பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்ப்பதற்கான கோரிக்கைகள்
- தொழில் பிரச்சினைகள்
    - வேலைவாய்ப்புக் கோரிக்கைகள்
    - மீண்டும் தொழிலில் அமர்த்துமாறு கோரிக்கை விடுத்தல்
    - இடமாற்றல்கள்
- பொது வசதிகள்
    - வீதி நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு
    - குழாய் நீர், மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை
- முறைகேடுகள்
    - பொலிஸ் திணைக்களத்திற்கெதிரான முறைப்பாடுகள்
    - ஊழல்கள் மற்றும் மோசடிகள்
    - நிறுவனத் தலைவர்களது முறைகேடுகள்
- அரசியல் பழிவாங்கல்கள்


2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் அவற்றுக்காக எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமான சுருக்க அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **மாதம்** | **கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை(பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகள்)** | **பதில் அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| ஜனவரி | **700** | **620** |
| பெப்ரவரி | **390** | **350** |
| மார்ச் | **530** | **512** |
| ஏப்ரல் | **470** | **466** |
| மே | **800** | **750** |
| ஜூன் | **436** | **422** |
| ஜூலை | **510** | **500** |
| ஆகஸ்ட் | **552** | **551** |
| செப்டெம்பர் | **917** | **865** |
| ஒக்டோபர் | **1,256** | **1,247** |
| நவம்பர் | **1,590** | **1,586** |
| டிசம்பர் | **3,204** | **3,201** |
| **மொத்தம்** | **11,355** | **11,070** |

இந்த முறைப்பாடுகள் மற்றும் குறைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் அவற்றை துரிதமாக கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் / அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதுடன் அது தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

- அமைச்சுக்களின் செயலாளர்கள்
- மாவட்டச் செயலாளர்கள்
- திணைக்களத் தலைவர்கள்
- கூட்டுத்தாபனங்கள் /கம்பனிகள் / நியதிச் சட்ட நிறுவனத் தலைவர்கள்.
- பிரதேச செயலாளர்கள்
- உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர்கள்

## 5.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்



## 6. பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு

### 6.1 அமைச்சரவை நிருபம், அமைச்சரவை குறிப்புக்கள், சட்ட மூலங்களைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட அலுவல்களை மேற்கொள்வதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பாராளுமன்ற அலுவல்கள் சம்பந்தமான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக கீழ் குறிப்பிடப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதமர் அவர்களால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள், சட்ட மூலங்களைத் தயாரித்தல் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும். அதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் பிரதமர் அவர்கள் 94 அமைச்சரவை நிருபங்கள் 27 அமைச்சரவை குறிப்புக்களை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

(ஆ) நிலையியற் கட்டளைகளின் கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் வினவிய வாய் மூலமான மற்றும் எழுத்து மூலமான பதில்களை எதிர்பார்க்கும் வினாக்கள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு பதில்களை தயாரிப்பதும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் பிரதமர் ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆணைக் குழு, நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் ஆண்டறிக்கை மற்றும் கணக்கறிக்கைகளை சபையில் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. அதற்கமைய, 2015.12.31 திகதியன்றுள்ளவாறு பிரதமர் அவர்களால் பதில் அளிக்கப்பட வேண்டிய 47 வினாக்களுக்காக பதில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் 05 ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் சபையில் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ) அவ்வாறே, ஏனைய அமைச்சுக்களின் ஊடாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை நிருபங்களுடன் தொடர்பாக அமைச்சரவையால் வழங்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை பிரதமரின் செயலாளரிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பங்களில் அதனுடன் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பாராளுமன்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 6.2 வெளிநாட்டு விடுமுறை

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க நிறுவனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அலுவல் மற்றும் தனிப்பட்ட வகையில் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக **21/2007** ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைப் பிரகாரம் பிரதமரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கமைய 2015.01.01 முதல் 2015.12.31 திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறை சம்பந்தமான பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | அமைச்சு | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 13 |
| 02 | இலங்கைப் பாராளுமன்றம்(பணியாட் தொகுதி) | 55 |
| 03 | ஆளுநரின் செயலாளர் அலுவலகம் | 5 |
| 04 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 10 |
| 05 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 78 |
| 06 | நீதி அமைச்சு | 87 |
| 07 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு | 12 |
| 08 | சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு | 38 |
| 09 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 11 |
| 10 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 193 |
| 11 | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு | 30 |
| 12 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 22 |
| 13 | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 745 |
| 14 | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 123 |
| 15 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 102 |
| 16 | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 63 |
| 17 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 18 | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 382 |
| 19 | நிதி அமைச்சு | 848 |
| 20 | திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 88 |
| 21 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 13 |
| 22 | உள்துறை அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 32 |
| 23 | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 266 |
| 24 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 12 |
| 25 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 85 |

| | | |
|---|---|---|
| **26** | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | **119** |
| **27** | மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | **241** |
| **28** | கமத்தொழில் அமைச்சு | **326** |
| **29** | புத்த சாசன அமைச்சு | **7** |
| **30** | கிராமியப் பொருளாதாரம் பற்றிய அமைச்சு | **33** |
| **31** | அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | **7** |
| **32** | அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு | **39** |
| **33** | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சு | **10** |
| **34** | வீடமைப்பு மற்றும் நிர்மாணங்கள் அமைச்சு | **11** |
| **35** | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு | **20** |
| **36** | காணி அமைச்சு | **56** |
| **37** | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு | **3** |
| **38** | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | **15** |
| **39** | வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சு | **108** |
| **40** | கல்வி அமைச்சு | **144** |
| **41** | தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சு | **37** |
| **42** | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | **2** |
| **43** | விளையாட்டுத்துறை அமைச்சு | **13** |
| **44** | தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் வசதிகள் அமைச்சு | **15** |
| **45** | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு | **12** |
| **46** | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | **54** |
| **47** | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | **7** |
| **48** | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | **49** |
| **49** | தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு | **0** |
| **50** | விசேட அலுவல்கள் அமைச்சு | **0** |
| | **பொதுத் தேர்தலுக்கு முன்னர் நிலவிய அமைச்சுக்கள்** | |
| **01** | இலங்கைப் பாராளுமன்றம | **8** |
| **02** | சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | **9** |
| **03** | உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | **1245** |
| **04** | மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு | **451** |
| **05** | சுற்றுலாத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | **156** |
| **06** | நகர அபிவிருத்தி, நீர் வளங்கள் மற்றும்வடிகாலமைப்பு அமைச்சு | **66** |

| | | |
|---|---|---|
| **07** | வீடமைப்பு மற்றும் சமுர்தி அமைச்சு | **34** |
| **08** | பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | **77** |
| **09** | அரசாங்க நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | **92** |
| **10** | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | **10** |
| **11** | சமூக சேவைகள், சமூக அபிவிருத்தி மற்றும் கால் நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | **49** |
| **12** | பொது ஒழுங்குகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு | **16** |
| **13** | உள்ளூராட்சி மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு | **8** |
| **14** | பெருந்தோட்டத்துறை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு | **2** |
| **15** | விசேட கருத்திட்டங்கள் அமைச்சு | **9** |
| **16** | கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு | **10** |
| **17** | சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு | **8** |
| **18** | பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு | **3** |
| **19** | கல்வி இராஜாங்க அமைச்சு | **2** |
| **20** | இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு | **25** |
| **21** | உயர் கல்வி இராஜாங்க அமைச்சு | **54** |
| **22** | விமான சேவைகள் இராஜாங்க அமைச்சு | **39** |
| | **மொத்தம்** | **7016** |

# 7. மனித வள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் நிதிசார் முன்னேற்றம

## 7.1 மனித வள அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்களின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகளை சாதகமான வகையில் விருத்தி செய்துகொள்வதன் ஊடாக அலுவலக நடவடிக்கைகளின் வினைத்திறன், உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை உயர்த்துவதற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சி வேலைத் திட்டங்களில்(பட்டறைகளில்) கலந்துகொள்வதற்காக உத்தியோகத்தர்கள் அனுப்பப்படுகின்றார்கள். அதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் பங்கேற்ற பயிற்சிப் பட்டறைகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- **வெளிநாட்டு பயிற்சிப் பட்டறைகள**

| இல. | பாடநெறி | பயிற்சிக் கால எல்லை | நாடு | கலந்து கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | மனித வளங்கள் அபிவிருத்தி செயலமர்வு | **2015.04.28 - 2015.04.30** | இந்தியா | **1** |
| 2. | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான சேவைகளை வெளித் தரப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளல் - அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு | **2015.05.11 - 2015.05.28** | சீனா | **1** |
| 3. | சார்க் பிராந்திய நாடுகளின் புலம்பெயர்வின் அடிப்படையிலான அபிவிருத்திச் சவால்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் | **2015.06.07-2015.06.11** | பங்களாதேஷ் | **2** |
| 4. | கணனிப் பயிற்சிப் பட்டறை | **2015.06.10-2015.07.11** | சீனா | **1** |
| 5. | ஆற்றல் விருத்தி பயிற்சிப் பட்டறை | **2015.09.06-2015.09.18** | மலேசியா | **1** |
| 6. | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரச துறையில் மனித வளங்களின் முகாமைத்துவம் | **2015.09.08-2015.09.30** | சீனா | **2** |
| 7. | ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி மற்றும் கிராமிய பிரதேசங்களின் நிலைபேறான சொத்துக்கள் குறைவடைதல் சம்பந்தமான கருத்தரங்கு | **2015.09.11-2015.09.27** | சீனா | **1** |
| 8. | ஆசிய நாடுகளில் பொது மக்களுக்கான அரச நிர்வாகம் சம்பந்தமான கருத்தரங்கு | **2015.10.09-2015.10.31** | சீனா | **1** |
| 9. | ஆசிய நாடுகளில் பொது மக்களுக்கான பொது நிர்வாகம் பற்றிய கருத்தரங்கு | **2015.10.09-2015.10.29** | சீனா | **1** |
| 10. | சிரேஷ்ட அரச பிரிவுக்கான கொள்கைகள் மற்றும் தலைமைத்துவம் பற்றிய கற்கைச் சுற்றுலா | **2015.11.27-2015.12.07** | அவுஸ்திரேலியா | **1** |

- **உள்நாட்டுபயிற்சிப் பட்டறைகள் மற்றும் பட்டப்பின் கற்கை பாடநெறிகள்**

| இல. | பாடநெறியின் பெயர் | பயிற்சி நிறுவகம் | பயிற்சிக் கால எல்லை | கலந்து கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான டிப்ளோமா | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) | 10 நாள் | 2 |
| 02 | தொழில் வல்லுனர்களுக்கான உயர் ஆங்கில டிப்ளோமா | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) | 10 நாள் | 1 |
| 03 | தமிழ் மொழிப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 62 மணித்தியாலம் | 50 |
| 04 | சுபோத்யா ஆலோசனை ஊடாக அறிவியல் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டம் | சமூக நலனோம்புகை அமைச்சு | 5 ½ மணித்தியாலம் | 50 |
| 05 | ஆங்கில மொழிப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 40 மணித்தியாலம் | 20 |
| 06 | தொலைபேசிப் பாவணை நுட்ப முறைகள் மற்றும் ஆரம்ப அலுவலக முகாமைத்துவம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) | 02 நாள் | 50 |
| 07 | நிதியியல் மற்றும் பொருளியல் விஞ்ஞானம் சம்பந்தமான முதுமாணிப் பட்டம் | கொழும்புப் பல்கலைக்கழகம் | 2 வருடங்கள் | 3 |
| 08 | முதுமாணிப் பட்டம் | கொழும்புப் பல்கலைக்கழகம் | 2 வருடங்கள் | 1 |
| 09 | முதுமாணிப் பட்டம்(சமூக விஞ்ஞானம்)2015/2016 | களணிப் பல்கலைக்கழகம் | 2வருடங்கள் | 1 |
| 10 | செயலகங்களுக்கான பயிற்சி சம்பந்தமான உயர் சான்றிதழ் பாடநெறி | National Institute of Business Management (NIBM) | 1 வருடம் | 1 |

## 7.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உற்பத்தித் திறன் விருத்திக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் விடயப்பரப்பு மாற்றமடைந்தமை காரணமாக திறம்பட்ட மற்றும் வினைத்திறன்மிக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையொன்றை ஏற்படுத்தும் நோக்கில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவொன்று புதிதாக தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் ஒருவரின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை இந்தப் பிரிவு உள்ளடக்கியுள்ளது.

‘‘**இ - அரச** கொள்கை’’யைப் பின்பற்றி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகளை அறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளை பூர்த்தி செய்வதும்தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் அடிப்படை நோக்கமாகும்.

- **இணையத்தள வசதிகளை வழங்குதல் மற்றும் வைரஸ் தடுப்பு நடவடிக்கை (Internet & Antivirus)**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வலையமைப்புத் தொகுதிக்காக புதிய குசைநறயடட தொகுதியொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக சகல உத்தியோகத்தர்களுக்கும் வினைத்திறன்மிக்க இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமாகியது. மத்திய வைரஸ் தடுப்பு மென்பொருளொன்றை (Security Center) தாபித்து கணனி வலையமைப்பில் வைரஸ் தடுப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (Official Website)**

பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு ஸ்ரீ லங்கா ரெலிகொம் சேவை நிறுவனத்தின் ஊடாக மனங்கவர் மற்றும் வசதிகளைக் கொண்ட இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டது. அதனூடாக பயன்படுத்துவோரின் வசதிகளை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு வர இயலுமாக இருப்பதுடன், இணையத்தளத்தை நிதமும் இற்றைப்படுத்துவதன் மூலம் அதனைப் பயன்படுத்துவோருக்கு நிகழ்கால மற்றும் சரியான தகவல்களை துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. இணையத்தளத்தினைத் தாபிப்பதில் காணப்படும் பாதுகாப்புக் குறைபாடுகளை (Security threats) அறிந்து அவற்றை நீக்குவதற்காக புதிய மெய்நிகர்

சேவையகமொன்று (Virtual server) தாபிக்கப்பட்டதுடன், மூலக் குறியீட்டில் (source code) காணப்பட்ட குறைபாடுகளை நீக்குவதன் ஊடாக மிகப் பாதுகாப்புமிக்க வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் இணையத்தளம் நாளில் 24 மணி நேரமும் வருடத்தில் 365 நாளும் பேணி வரப்படுகின்றது. இணையத்தளத்தின் பூரண கட்டுப்பாடு தற்போது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேவையகம் (Internet Mail Server)**

புதிய குசைநறயடட முறைமையை தாபித்ததன் ஊடாக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேவையகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளகப் பயன்பாட்டிற்காக மென் பொருட்களை உருவாக்குதல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக ரீதியான தாபன நடவடிக்கைகளை இலகு படுத்துவதற்குத் தேவையான மென் பொருட்களை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனூடாக மென்பொருட்களுக்குத் தேவையான செலவைக் குறைத்துக் கொள்ள முடியுமாக இருப்பதுடன் நவீனமயப்படுத்துவதற்கான வாய்ப்பும் (Version update) காணப்படுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தபால் வழிகள் மற்றும் உள்ளக ரீதியில் கோவைகளை முகாமைப்படுத்துவதற்காக மென்பொருள் தொகுதியொன்றின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை பிரதமர் அலுவலகத்தில் மற்றும் பொது மக்கள் முறைப்பாட்டுப் பிரிவில் பயன்படுத்தப்படுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பாராளுமன்றத்துடன் தொடர்பான கோவைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக இலவச மென் பொருளொன்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஈ - நூலகத் தொகுதியொன்றை தயாரித்தல் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

- **அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளை பூர்த்தி செய்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அரச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களுடன் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையை தகவல் மற்றும்

தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு நிறைவேற்றுகின்றது. அதற்கமைய கிராமீய சந்தை அபிவிருத்தித் திட்டத்திற்கான தகவல்களை உட்படுத்துவதற்கான இணையத்தளமொன்றை நிர்மாணித்தல், ஸ்ரீ லங்கா ரெலிகொம் சேவைகள் நிறுவனத்துடன் ஒருங்கிணைப்பிணை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தவிர, நிறுவனத்தின் கிழ் குறிப்பிடப்படும் அலுவல்களுக்கு தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

1. பணியாட் தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் செயன்முறை ரீதியான தகவல் தொழில்நுட்ப பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.

2. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப செயல் திட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

3. தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சேவைகளுடன் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு இற்றைப்படுத்திப் பேணி வரல்.

4. தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கொள்வனவுகளுக்கான விவரக் குறிப்பைத் தயாரித்தல் மற்றும் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்த

### 7.3 நிதிசார் முன்னேற்றம்

அலரி மாளிகை வளவில் நிர்மாணிக்கப்படும் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது பூரணப்படுத்தப்படும் தருவாயில் இருக்கின்றது. இதன் நிர்மாணப் பணிகளுக்காக இலங்கை கடற் படையின் ஊழியப் பங்களிப்பு வழங்கப்படுவதுடன் கட்டிடப் பொருட்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றது. இந்த நடைமுறையின் ஊடாக குறைந்த செலவில் உயர் தரத்திலான மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்துக்கொள்ள முடியுமாகியுள்ளது.

2015 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுகள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

| இல. | செயற்பாடு | செலவிடப்பட்ட மொத்தத் தொகை | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | புதிய கட்டிட நிர்மாணத்திற்காக | ரூ. **10,068,857.02** | **1** |
| 2. | கட்டிடப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக | ரூ. **31,249,652.96** | **2** |
| 3. | வாகனங்கள் கொள்வனவுக்காக | ரூ. **5,190,446.00** | **3** |
| 4. | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக | ரூ. **24,483,193.11** | |
| 5. | இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக | ரூ. **481,546.19** | |

**<u>குறிப்பு 01</u>**

- கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைரூ.**36,926,488.50**
- 2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள கட்டிடப் பொருட்களின் பெறுமதிரூ.**20,652,159.20**
- 2015 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள கட்டிடப் பொருட்களின் பெறுமதிரூ.**9,974,250.77**
- பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த நிதிரூ. **16,000,000.00**

**<u>குறிப்பு 02</u>**

- பிரதம அமைச்சர் அலுவலகம், அலரி மாளிகைக் கட்டிடம் மற்றும் கண்டி பங்களாவை புனரமைத்தல்

**<u>குறிப்பு 03</u>**

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கடிதங்களை துரிதமாக பகிர்வதற்காக 02 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவு ரூ.**324,200.00**
- பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு குத்தகை முறையின் கீழ் 04 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக 2015 ஆம் ஆண்டில் போது செலவு செய்யப்பட்ட தொகை ரூ.**4,866,246.00**